உ

# ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகள் சரித்திரம்.

பிரம்மஸ்ரீ பஞ்சுபாகவதர்.

1917.

(All-Rights Reserved)

விலை அணா 4.

OFFICE OF THE REGISTRAR
6 - DEC 1917
MADRAS

VR 21 ம L 51
N 17
58888

உ

# ஸ்ரீஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகள்

OFFICE OF THE REGISTRAR
5 - DEC 1917
MADRAS.

# சரித்திரம்.

இது

ஷை ஸ்வாமிகளது பிரதம சிஷ்யரான

திருநெய்த்தானம்

ஸ்ரீமத் இராமுவய்யங்கார் அவர்கள் மாணுக்கர்

ஷையூர்

**பிரம்மஸ்ரீ பஞ்சுபாகவதர் அவர்களால்**

இயற்றப்பட்டு

ஸ்ரீ தியாகராஜ ஸத்குருவின் கருணையே சிரமேற்கொண்ட

ஸ்ரீச்ருங்கேரி ஜகத்குரு ஸம்ஸ்தான

சங்கீதவித்வான்

ப்ரம்மஸ்ரீ நேமம் நடேச சாஸ்திரி அவர்களாலும்

ப்ரம்மஸ்ரீ ரிஜிஸ்டிரார் ஆப் புக் ஆபீஸ்

ஸீநியர்ரீடர் டி. கே. சடகோபாசாரியர்

குமாரனாலும் பார்வையிடப்பட்டு

சென்னை

சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1917.

Copy-right Reserved] [விலை அணா 4.

429 NR21w L59
27:84 N17

# முகவுரை.

நெடிய கடலாடை யுடுத்த நிலமடைந்தையின் திலகம்போன்ற நம் பரத கண்டத்தின் பதினெட்டுப் பாஷைகளிலும் சிறந்ததாம் தமிழென்னும் ஸாகரத் தமதறிவாகிய தெப்பத்தாற் கடந்த ஆரியர்காள்!

சென்ற சில வருஷங்களாக திருவையாற்றில், (தஞ்சாவூர் ஜில்லா) ஸ்ரீராமபிரானது பரம பக்தரும், ஸ்ரீ. வால்மீகிமுனி வரதவதார மென்றே கருதப்படும் ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகளின் மகோற்சவம், அநேக சங்கீதவித்வான்களாலும் பாகவதோத்தமர்களாலும் இன்னும் மற்று முள்ள கனதனவான்களாலும் வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது யாவருக்கும் தெரிந்ததே.

58888

இவர்கள் இம்மகானிடத்தில் இவ்வளவு பக்தி சிரத்தையோடு நடந்து வருகிறதற்குக்காரணம் இவர் செய்த அமிர்த மயமான கீர்த்தனைகளன்றோ! அவை தங்களது உண்மையான (பரதசாஸ்திரப்படி) பாவ ராக தாளங்களினின்றும் வேறு பிரிக்கப்பட்டு ஸாகித்யங்களிலும் அக்ஷரப் பிசகுகளுடன் தற்காலமுறைமைப் படி யவரவரிட்டம்போற்பாடப்பெறினும், அவைகளும் மானிடராகிய நமக்கு ஒருவித யின்பத்தை யூட்டுவனவா யிருக்கின்றன. அப்படியின்றி இவை அவைக் கேற்ற முறையுடன் நல்ல "குருவிட மிருந்தப்பியசித்துப் பாடப்பெறின் எவ்வளவு யின்பத்தைப் பயவா?

இஃது இவ்வாறாக, தற்காலத்திய மாந்தர்க்கு இவரிடத்தில் இவரது கீர்த்தன மொன்றினால் மட்டு

முண்டாயிருக்கும் ஒருவிதமான குருட்டுப் பக்தியை ஒழித்து, பிரகாசமான உண்மையான பக்தியிவரிடத்துண்டாக்க இவரது சரித்திரம் உலகில் அவசியம் வேண்டுமென்பது இதை யூகிக்கும் ஒவ்வொருவருக்கும் எளிதிற் புலப்படக்கூடும்.

இச்சரித்திரமானது ஏற்கனவே ஒருமுறை பிரசுரிக்கப்பட்டு வெளிவந்திருப்பினும், அஃது அவ்வளவு உண்மையுடைத்து என்பது எனக்குத்தோன்றவில்லை. அதற்காக யான் கூடியவரையில் என் எளிய புத்தியைக்கொண்டு அவரது கீர்த்தனங்களினுண்மையைப் பரிசீலனஞ்செய்து அவற்றின் உண்மையோடு எனது ஆசிரியர்களாலும் மற்றுமுள்ள பெரியோர்களாலும் சொல்லக்கேட்டவற்றை யொருங்குசேர்த்து ஒரு சிறிய புத்தமாகச் செய்திருக்கிறேன்.

இப்புஸ்தகத்தில் 'பக்தியே மோக்ஷத்திற்குச் சிறந்தமார்க்க' மென்னும் கருத்து வெகுவாக யெடுத்துக் கூறப்பட்டிருப்பினும், கேவலம் வெறும் பக்தியைப் பற்றிக்கூறிக்கொண்டே போனலது கேட்பவருக்கவ்வளவு சுவைப்படாதென்று கருதியே, இடையில் வேடிக்கையாக 'நாரதர் கலகம், கூனியின்வரலாறு, அதன் தருமத்தைக் கெடுக்கச்செய்யும் செய்கை முத [illegible] யெடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இச்சரித்திரம் உண்மையோ அல்லது தற்காலங்களிலெழுதும் கட்டுக்கதைகள் (Novels) போல்வனவோ என்னும் ஐயத்தை நீக்க அச்சந்தேகங்கள் தோன்று மிடந்தோறும் அவசியமான இடங்களில்

இம்மகானவிருச்செய்த கீர்த்தனங்களின் முதல் வார்த்தை தெற்றென வரையப்பட்டிருக்கின்றது. ஆந்திரம் தெரிந்தவர்கள் அக்கீர்த்தனங்களின் அகராதியைக் கொண்டு அவற்றின் அர்த்தத்தைக் கவனிப்பார்களே யாயினுண்மை யுலப்படும்.

இச்சரித்திரத்தைக் கதா நிரூபணமாகச் செய்து நல்ல பாகவதோத்தமர்களைக்கொண்டு கதாகாலக்ஷேபமாகச்செய்து பார்க்கவேண்டுமென்னுமவா என் மனதிற் குடி கொண்டிருக்கிறது. ஆதலால் மிகவும் பக்தியுள்ள பாகவதோத்தமர்கள் முன்வந்தென் குறையைத் தீர்ப்பாரென் றெண்ணியே இச்சரித்திரத்தைப் பிரசுரிக்கலானேன்.

இப்புத்தகத்தால் வரும் கிரயத்தொகை யதன் பொருட்டுச் செலவிட்ட பொருள் கிடைத்தாலமையுமென்று கருதியே இலகுவான விலை ஏற்படுத்தலாயிற்று.

இது பற்பல வேலைகளுக்கிடையே எழுதியபடியாலும், எனக்குத்தமிழில் அவ்வளவு இலக்கிய இலக்கணப்பயிற்சி போ[illegible]தபடியாலும், இதிலுள்ள சொற்குற்றம், பொருட்குற்றம், முதலியவற்றை யிதை வாசிக்கும் நண்பர் பொறுத்து இதிலுள்ள சாராம்சத்தை மாத்திரம் கைக்கொள்வா[illegible].

இங்ஙனம்

பஞ்சுபாகவதர்,

திருநெய்த்தானம்.



ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸுவாமிகள் சரித்திரம்.

## (முதற்பாகம்.)

### அத்தியாயம் - 1.

பூவுலகில் எல்லாவளங்களும் பொருந்திய சோழ நாட்டில் காவிரிநதியின் வடபாலமைந்திருக்கும் திருவையாறென்னும் பஞ்சநதப்பதியில் ஸகல சாஸ்திர ஸம்பன்னராகவும், பிர்மவித்தாகவும், நாடோறும் ஸ்ரீரகுநாதனை உபாஸித்துக்கொண்டும், ஸ்ரீமத் ராமாயணக்கதைகளை அனைவருக்கும் உபதேசித்து அதனாற் கிடைத்த பொருளால் ஜீவனம்செய்து கொண்டும், (பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவருமான) ராமபிரம்மம் எனப்பேருடைய ஒரு பிராமணோத்தமரிருந்தார். அவருக்கு வெகுகாலமாய்ச் ஸந்ததி யில்லாததனால் அவர், ராமாயணக் கதைகளையே விரித்து உபதேசித்தும், தான் பூஜித்துவந்த விக்கிரகங்களை ஆராதித்தும் தனக்கு ஸந்ததி இல்லாமற் போயிற்றே என மனக்கவலைகொண்டு தினந்தோறும் கதை முடிந்தவுடன் வெகுபக்தியோடு ஸ்ரீராமபிரானை ஸந்ததி வேண்டுமெனப் பிரார்த்தித்து வந்தார்.

## அத்தியாயம் - 2.

ஸ்ரீ நாரதமாமுனிவர் ஒரு காலத்தில் பூலோகத்திற்கு வந்திருக்கும் ஸமயத்தில் இந்த யுகத்திற்குத் தலைவனான கலி புருஷன் இம்மகானைக் கண்டு நாரத ஸ்வாமியே! தாங்களிவ்விடம் வந்த காரணம் யாது? தங்களுக்கு என்னால் ஆகவேண்டிய காரியங்கள் எவையேனும் உளவோ? அப்படி யிருப்பின் சொல்லுங்கள்; உடனே முடித்துத் தருகின்றேன். இனி தாங்கள் இவ்வுலகத்தில் அதிக சஞ்சாரம் வைத்துக்கொள்ள வேண்டாம். என்னுடைய வலிமையைத் தாங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். உங்களுக்கும் மேம்பட்ட மகா தபஸ்விகளைக் கூட ஒரே நிமிஷத்தில் விஷயங்களில் இழுத்துவிட்டுத் தன்னை மறக்கும்படிச் செய்து நற்கதி யடையவொட்டாமல் தடுத்துக் கெடுத்து விடுவேன். இவ்வலிமையை ஈசனாலும் தடுக்க இயலாது. ஆதலின் தாங்கள் வந்த காரியத்தை முடித்துக்கொண்டு சீக்கிரமே சென்றுவிடுங்கள் என்று வெகு கர்வத்தோடு சொன்னான்.

அதுகேட்டு சுவாமி அதிககோபங்கொண்டு, அடா! இந்த அற்பகலிக்கு முதற் பாதத்திலேயே இவ்வளவு கர்வ முண்டாகி விட்டதே! இதை அடக்கி விட வேண்டுவ தவசிய மென்று மனதில் நினைத்துக் கலியைப் பார்த்து புகழ்ந்து, "உனது சாமர்த்தியத்தைக் கண்டு மகிழவே இவ்விடம் நான் வந்தேன்" என உரைத்து அவனிடம் விடைபெற்றுக்கொண்டு வெள்ளியங்கிரியாகிய கயிலைக்குச் சென்று ஆங்கு உலக மாதாவாகிய உமாதேவியோடுவீற்றிருக்கும் சிவபிரானைவணங்கி துதி செய்து பூலோகத்தில் நடந்த விருத்தாந்தங்க

தெரிவித்து, கலிபாதையின்றி உலகத்தில் ஜீவகோடிகள் நற்கதியடையத்தகுந்த உபாயம் யாதென்று வெகு வினயத்தோடு கேட்ட நாரதரைப்பார்த்து உமாபதி சொல்லுகிறார்:—

"ஹே நாரதா! இந்த யுகத்திற் கதிபதி கலிபுருஷன். அவனை வெல்லுதற்கு ஒருவராலும் முடியாது. மேலும் வேதங்களில் அநேகமந்திரங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் அவைகளும் கலியை வெல்ல மாட்டா. ஆயினும் என்னை நீ கேட்கின்றபடியால்யான் உனக்கு வெளியிட்டுச் சொல்லுகிறேன். வேதங்களால் வெளியிடப் பட்டுள்ள ஏழுகோடி மந்திரங்களுள் முக்கியமானது ஸ்ரீராம தாரகமந்திரம். அதை யான் ஆத்மமந்திரமாக வைத்துக்கொண் டிருக்கிறேன். அதை, யான், என்னுடைய பக்தனை வாகீச ரென்னும் அப்பர்சுவாமிகளுக்குக் காக்ஷிகொடுத்த பஞ்சநத க்ஷேத்திரத்தில் மரணமடைகிறவர்கள் வலது செவியில் உபதேசித்து யமபாதையின்றி என்னுலகம் வந்து சேரும்படி ஸங்கற்பித்து நடத்திவருகின்றேன். அது எனக்கு ஆதிஸங்கற்பமாக ஏற்பட்டு விட்டபடியால் பூலோகம் முழுமையும் வியாபிக்கச்செய்ய முடியாமற் போயிற்று. கலிபுருஷனை வெல்ல முடியாமைக்குக் காரணம் கேட்பின் அவன் ஜீவர்களைக் கெடுப்பதற்குச் சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ கந்தமென்னும் ஐந்து விஷயங்களைத் தனக்குத் துணையாகக்கொண்டு ஜீவர்களது ஐந்து இந்திரியங்களையும் இழுத்துக்கொள்கிறான். அவை போனபடியே அந்தக்கரணமும் சென்று விடுகிறது. ஆகையால் ஜீவர்களுக்கு மனம் ஏகாக்கிரப்படுவதில்லை. இதனடியாக அவர்கள் நரகத்தில் விழுகிறார்கள்.

அப்படிப் போகாமல் மனம் ஒன்றுபடும்படிச் செய்ய ஒரு உபாயஞ் சொல்லுகிறேன்; கேள். விஷயங்களுள் சப்தம் முக்கியம். அந்த சப்தம் என்னால் சொல்லப்பட்டுள்ள காந்தர்வ வேதத்தில் ஸப்த ஸ்வரங்களாகப் பிரிக்கப்பட்டு, ஜீவர்கள் மோக்ஷமடையும்பொருட்டுக் கானம் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் இந்தச் சப்தத்தினாலுண்டாகும் சுகமானது விஷயங்களில் ஒன்றாக இருந்தபோதிலும், நிருபாதிகமாக இருந்து மனதை ஏகாக்கிரப்படுத்துகிறது. அப்போது அந்த மனதினால் ஈச்வரனை விஷயீகரித்து, தாரக மந்திரத்தை யுச்சரிப்பார்களே யாகில் அவர்களைக்கண்டு கலி புருஷன் பயந்து நடுங்கி ஓடிப் போய் விடுவன்; திரும்பி நாடமாட்டான். இதுதான் நிச்சயம். ஆகையால் காந்தர்வவேதத்தோடு ராமதாரகமந்திரத்தைச் சேர்த்தெல்லாரும் பாடும் படியும், கேட்கும் படியும் பூலோகத்தில் நிலைநிறுத்தி வைப்பாயேயானால் கலிநாடமாட்டான். இச்சங்கதிகளை ஸ்ரீமந் நாராயணமூர்த்தி யிடத்தில் தெரிவித்தப்படியே செய்விப்பாய்” என ஆக்ஞாபித்தார்.

அவ்வுத்தரவைச் சிரமேற்கொண்ட நாரதர் ஸ்ரீ வைகுண்டத்திற்குச் சென்று அங்குச் சேஷசாயியாகிய ஸ்ரீலக்ஷ்மீபதியைத் தரிசித்துப் பூலோகத்திலும் கயிலையங்கிரியிலும் நடந்த விருத்தாந்தங்களை விவரமாகத் தெரிவித்தார். அதுகேட்டு விஷ்ணுவும் வெகு சந்தோஷமடைந்து நாரதரைப்பார்த்து ‘ஓ முனி சிரேஷ்டா! பூலோகத்தில் பஞ்சநதப் பதியில் ராமப் பிரும்மமெனப் பேருடைய ஒரு பிராமணோத்தமன் தனக்கு ஸந்ததி வேண்டுமென வெகுகாலமாக

என்னை உபாஸித்து வருகிறான். அவனுக்குப் புத்திரப் பேறளிப்பதாக உத்தேசித்திருக்கிறேன். இந்தச் சமயம் நீ தெரிவித்தபடியால் நான் மிகவுஞ் சந்தோஷ மடைந்தேன். இந்தக் காரியத்திற்கு உசிதமாக யாரை யனுப்பலாம்' என்று கேட்டார்.

பிரும்ம புத்திரரான நாரதர், "நாராயண மூர்த்தியே! தங்களுக்குத் தெரியாத காரியம் யாதொன்று மில்லையே. ஆயினும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பூர்வத்தில் வேடகிருத்யத்தைச் செய்து, பிறகு ஸ்ரீராமமந்திரத்தை ஜபித்ததினால் தங்கள் அநுக்கிரகம் பெற்று ஸ்ரீ ராமகுணங்களை நூறு கோடி கிரந்தமாகச் செய்து குசலவர்களைக் கொண்டு தங்கள் சந்நிதானத்தில் கானஞ் செய்வித்துத் தங்கள் கருணைக்குப் பாத்திரனை என்னுடைய சிஷ்யன் வால்மீகி முனிவன் இருக்கிறான். அவனுக்கின்னமிரண்டு ஜன்மங்களிருக்கின்றன. அவைகளைச் சீக்கிரமாக வொழிக்கவும் இந்தக் காரியங்களைப் பூர்த்தி செய்து வரவும் அவனைப் பூலோகத்திற் கனுப்பும்படித் தங்களைப் பிரார்த்திக்கிறேன்" என்று சொன்னார். அதுகேட்டுக் கேசவனு மானந்தமடைந்து அப்படியே யனுப்புவதாக நாரதருக் குறுதிபகர்ந்தார்.

## அத்தியாயம் - 3.

உடனே நாரத ஸ்வாமி விடைபெற்றுக்கொண்டு வெகுசீக்கிரமாகப் பூலோகத்திற்கு வந்தார். அப்போது கலிபுருஷன் மகதியென்னும் யாழைக் கையிலேந்திய நாரதரை வணங்கி, "மறுபடியுந் தாங்களிவ்விடம் வருவானேன்? தங்களுக்கு முன்னமே யான் எச்சரித்திருக்கிறேன்" என்று சொன்ன கலியைப்பார்த்துப் பிரும்ம

புத்திரர், "அப்பாகலி புருஷா! நீயும் நானும் ஒரே தொழிற்காரரல்லவா? உன்னிடத்திலிருக்கும் அன்பானது என்னை அடிக்கடி வரும்படி செய்விக்கின்றது. உனக்கு ஒருகுறைவு நேரிடின் அது எனக்கில்லையா? அதை உனக்குத் தெரிவிக்கவே இவ்விடம் யான் வந்தேன். உனக்கு என்மீது வருத்தமானல் நான்போய் வருகிறேன்" என்று சொல்லி எழுந்தார். அப்படியெழுந்த நாரத பகவானை வணங்கிக் கலியானவன், "ஏ மித்திரச் சிரேஷ்டரே! சிறியவன் மீது கோபம் வேண்டாம். நான் ஏதேனும் பிசகு செய்திருந்த போதிலும் மன்னித்து விட்டுச் சற்றிருந்தெனக்கு வந்திருக்கும் தீங்கை யின்னதென்று விவரித்துச் சொல்ல வேண்டும்" என்று வெகுவாய்ப் பிரார்த்தித்தான்.

நாரதமுனிவர், 'அப்பா அன்புள்ள கலி புருஷா! எனக்குச் சுகம் துக்கம் மானம் அவமானம் முதலான எல்லாம்சரியே. ஆனல், லோகோபகாரார்த்த மாகவே ஜீவனை வைத்துக்கொண்டு சஞ்சரிக்கிறேனே யொழிய வேறில்லை. ஆயினுஞ் சொல்லுகிறேன் கேள்; பூலோகத்தில் நற்கதியடைய வேண்டிய ஜீவர்கள் உனது மகிமையை யறியாது உன்னைத் துவேஷித்து உன்னாலவர்கள் நற்கதி யடையத் தடைபட் டிருப்பதாக நினைத்து உன்னை அவமதித்து மோக்ஷமடையும்படி யொரு மார்க்கம் கற்பித்துக் கொடுக்கவேண்டு மென்று சங்கரனிடத்திலும் மாதவனிடத்திலும் கேட்டுக்கொண்டார்களாம். அதின்மேல் அவர்கள் ஸ்ரீராமதாரக மந்திரத்தை மனதை ஏகாக்கிரப் படுத்துமினிய சங்கீதத்துடன் சேர்த்துக் கீர்த்தனைகளாகப் பண்ணி அந்த மார்க்கத்தைப் பூலோகம் முழுமையும் வியாபிக்கும்படி செய்து விடு

றிறதென்றும் அதற்காக வால்மீகிமுனிவரைப்பூலோகத்தில் பஞ்சநதப்பதியில் ராமபிரும்மமெனப் பேருடைய ஒரு பிராமணனுக்குப் புத்திரனாக வந்து பிறக்கும்படியும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படி நடந்து விடுமானால் உன்னுடைய வல்லமைக்குக் குறைவு நேரிடுமென நினைத்து, முன்னதாகவே உனக்குத் தெரிவிக்க இவ்விடம் வந்தேன்' என்று சொன்னார்.

அப்போது கலியானவன் இடியுண்ட அரவம்போல் திடுக்குற்று ஒன்றுந் தோன்றாதவனாய் அவரை வணங்கித் தன்மீது கிருபை செய்து அதற்குத் தக்க ஓர் உபாயம் சொல்லவேண்டும்' என்று வெகுவாய்ப் பிரார்த்தித்தான்.

மாமுனிவர் சற்றுயோசிப்பவர் போல் நடித்து அவனை நோக்கி 'உன்னை இந்தயுகத்திற் கதிபதியாக்கிய பிரம்மனிடத்தில் இவைகளைத்தெரியப்படுத்திப்பூமியில் அவதரிக்கப்போகிற வால்மீகிக்கு முந்தினவனாகப் பிறந்தவனால் செய்யப்பட்டு வரும் நற்காரியங்களுக் கிடையூறுகளைச் செய்து அவைகளை நிறைவேறவொட்டாது செய்து முடிப்பாயேயானால் உனக்கு வெகு கீர்த்தியுண்டாகும். இதைத் தவிர வேறு உபாயமில்லை. என்னை நீ கேட்டபடியால் உண்மையாகக் கூறிவிட்டேன்", என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டேகிவிட்டார்.

கலியும் பிரம்மலோகம் சென்று அவரிடத்தில் அப்படியே வரம் பெற்றுக்கொண்டு முன் சொல்லிய ராமபிரும்ம மென்னும் பிராமணருக்குப் புத்திரனாக வந்து ஜனித்தான். அப்போது ராமபிரும்ம மென்

னும் பிராமணரும் வெகு ஸந்தோஷ மடைந்து இவனுக்கு ஜப்யேசனென்று நாமகரணஞ் செய்வித்தார்.

நாரதஸ்வாமி பின் னடக்க வேண்டிய விஷயங்களை உத்தேசித்துக் கயிலைக்குச் சென்றிது வரையில் நடந்த விஷயங்களைத்தெரிவித்து அவரது அநுக்கிரகம்பெற்று, பிறகு, வைகுண்டலோகஞ்சென்று இவ்விருத்தாந்தங்கள் யாவற்றையும் கோவிந்தனிடம் தெரிவித்து, வால்மீகி அவதரிக்கும் விஷயத்தை ஞாபகஞ் செய்வித்தார். அது கேட்ட கேசவனும் புன்னகை கொண்டு, ஸ்ரீவால்மீகி மாமுனிவரை யழைப்பித்து ஏ வால்மீகி! உனக்கின்னுமிரண்டு ஜன்மங்களிருக்கின்றன. ஆதலால், நீ பூலோகத்திற் கலிபாதை யதிகரித் திருப்பதால் அதை நிவர்த்தி செய்யும் பொருட்டுக் காவிரி தீரத்திற் பஞ்சநத க்ஷேத்திரத்தில் ராமபிரும்ம மென்னும் பிராமணனுக்குப் புத்திரனாக ஜனித்து ஸங்கீதத்துடன் ஸ்ரீ ராமதாரக மந்திரத்தைக் கலந்து எல்லாருங் கானம் செய்யும்படி ராமாயணம் போல் கீர்த்தனைகளாகச் செய்து முடித்து விட்டு என்னிடம் வந்து சேர்'', என்று ஆக்ஞாபித்தார்.

இதைச் செவியுற்ற வால்மீகி ஜன்மமெடுக்கப்பயந்தவராய் (ஸாயாரோயாரு) என்பதை பாடிக் கேட்டுக் கொள்ளும்போது பகவான், 'ஏபக்த சிகாமணியே! உன திரண்டு ஜன்மங்களையும் ஒரே பிறப்பில் நிவர்த்தி செய்து விடுகிறேன். நீ கலியை வெல்லும் படியான கீர்த்தனைகளைச் செய்து முடித்த பிறகு துரியாச்ரமமெடுத்துக்கொள். அப்போது இரண்டுஜன்மமாகிவிடும். நீ கவலைப் படவேண்டாம். நீ யவதரிக்கு மிடத்திலும் நான்கூடவிருந்து இரக்ஷிக்கிறேன்'',என்று அபயமளித்

தனுப்பினர். ஆக்ஞைப்படி வால்மீகரும் வெகு சந்தோஷத்துடன் முன் சொல்லிய ராமபிரும்ம மென்னும் பிராமணருக் கிரண்டாவது புத்திரராக, கலி 4859 வெகுதான்ய வருஷம் வந்தவதரித்தார்.

## அத்தியாயம் - 4.

அப்போதிவர் தந்தையாகிய ராமபிரும்ம மென்னும் பிராமணர் தமக்கு வெகு காலமாய் ஸந்ததியில்லாத ஆவலினால் பகவான் கிருபை செய்து இரண்டு குழந்தைகள் அளித்தாரென வெகு சந்தோஷமடைந்து இவருக்குத் தியாகராஜனென்று நாமகரணஞ் செய்வித்தார். இவ்விருவரும் நாளுக்கு நாள் பூர்ண சந்திரனைப் போல் விருத்தி யடைந்து வந்தார்கள். இவர்களுக்கு வேத விதிப்படி உபநயனஞ் செய்வித்து வேதசாஸ்திரங்களைக் கற்பித்து வைத்தார். அவ்விளமையிலேயே கலி ரூபனான ஜப்யேசன் குருபக்தி, பித்ருபக்தி முதலிய குணங்களை விட்டு அவர்களுடன் குதர்க்கம் பேசியும், துர்ஜனங்களோடு சிநேகம்செய்தும்வந்தான். வால்மீகர் அம்சமான தியாகராஜரோ மாதா, பிதா, குரு, பெரியவர் முதலானவர்களிடத்தில் வெகு பக்தியோடு அவர்கள் சொற்படி நடந்து வந்தார். அப்பொழுதே இவ்விருவருக்கும் இருந்த தாரதம்யத்தைப் பார்த்த பிதாவாகிய ராம பிரும்மம், இவர்கள் நமக்குப் பிறகு ஒற்றுமையா யிரார்களென்று நிச்சயித்து, இவ்விருவருக்கும் விவாக முகூர்த்தம் நடத்த யத்தனித்தார். அது தெரிந்த தியாகராஜர் தாய் தந்தையர்களை வணங்கி, "இந்த ஸம்ஸாரமாகிய ஸாகரத்திலென்னையும் மூழ்கும்படி செய்ய யத்தனிக்கலாமா வென்று கேட்க, தந்தையாகிய ராமபிரும்மம் "ஏ தியாகராஜா!

உன்னை நாங்கள் ஸாமான்யமாக நினைக்கவில்லை, உன்னிட மிருக்கும் ஈச்வர பக்தியைப் பார்க்கில் ஏதோ அவதார புருஷனைகத் தோற்றுகிறது. ஸம்ஸார மாகிய பெரிய சமுத்திரத்தில் வெகு காலமாய் மூழ்கி யிருக்கிற அநேக ஜீவகோடிகளை நீ கரை யேற்றப் போகிறாயென்று நிச்சயிக்கிறேன். மேலும், இப்போது நான் பூஜித்து வருகிற ஸ்ரீராமமூர்த்தி முதலிய விக்கிரங்கங்களை ஆராதிப்பதற்கு நீயே தகுந்தவனென்று எனக்குத் தோன்றுகிறது. ஆதலால் அது விஷயமாக நீ கிரகஸ்தாச்சிரமத்தி லிருக்கவேண்டி யிருக்கிறது. யாதொரு தடையுஞ் சொல்லவேண்டாம்". எனச்சொல்லி யிவர்களுக்கு விவாகமுஞ்செய்வித்தார். கொஞ்ச காலஞ்சென்ற பிறகு அவர் முற்கூறிய விக்கிரகங்களை எல்லாம் தியாகராஜருக்குக் கொடுத்துவிட்டு பூஜாவிதிகளையும் உபதேசித்துப் பின் ஸ்ரீராமபத மடைந்தார்.

## அத்தியாயம் - 5.

அது முதல் தியாகராஜர் பிதா சொல்லை மறுக்காமல் அந்த விக்கிரகங்களை வெகு பக்தி சிரத்தையோடு பூஜித்து வந்தார். இப்படி யிருக்கையில் மூத்த குமாரனை ஜப்யேசன் வெகு சந்தோஷத்துடன் தான்செய்ய வேண்டிய காரியங்களை உத்தேசித்து அதற்கு வேண்டிய நடவிட காயகதாஸிகளை ஸ்வாதீனப் படுத்திக் கொண்டு, வேத மார்க்கத்திற்கு விரோதமான கர்மங்களை விருத்தி செய்துகொண்டே வந்தான். தியாகராஜரோ தன்னுடைய நித்திய கர்மாநுஷ்டானங்களைத் தவறாமல் செய்து முடித்து விட்டு இவரிடத்தில் வரும் ஸாது ஜனங்களுக்குப் பகவானது குணசரிதங்களாகிய

ஸ்ரீமத் பாரத பாகவத ராமாயண முதலான கதை களை உபதேசித்துக்கொண்டு வந்தார். இவ்விதம் நடந்து வரும் காலத்தில் பூர்வஜன்ம வாஸனையின் முதிர்ச்சியால் புராணங்களிற் கூறியபடி பகவானைச் சங்கீதத்தால் கானஞ் செய்து உபாஸித்து ஸ்வாதீனஞ் செய்துகொள்ள வேண்டுமென நினைத்து, அதற்கு எவரைக்குருவாக அடையலாமென யோசித்து, அவ்வூரி லிருந்த ஸ்ரீ ஸொண்டி வெங்கடரமண தாஸரிடஞ் சென்று நமஸ்கரித்து மிக வணக்கத்துடன், "எனக்கு ஸங்கீத வித்தையில் விருப்பமிருப்பதால் அதையெனக் குக் கிருபை செய்து அப்பியசித்து வைக்கப் பிரார்த் திக்கிறேன் எனவும், அந்தத்தாஸர் "அப்பா நீ வேதாப் பியாசி யாயிற்றே. ஆதலால், உனக்கு ஸங்கீதம் வரு மோ என யோசிக்கின்றேன். ஆயினும் உனது வம் சத்தையும் குணத்தையும் உற்று நோக்கும்போது நீ கேட்கிற விஷயத்திலெனக்கு வெகு சந்தோஷ முண் டாகிறது. நீ அடிக்கடி இவ்விடம் வந்து கொண்டிரு" வென்று ஆக்ஞாபித்தார்.

அப்படியே தியாகராஜர் தினந்தோறும் தம்மு டைய காரியங்களை முடித்துக்கொண்டு குரு ஸேவை புரிந்துவருங் காலத்தில் ஓர் இரவு ஸ்ரீராமபிரான் வெங்கடரமண தாஸரது கனவிற்றோன்றி, "உமக்கு இப்போது சிஷ்யனாகக் கிடைத்திருக்கிற தியாகராஜன் விஷயத்தில் ஏன் காலதாமதம் செய்துவருகிறீர். அவ னால் உமக்கு வெகு கீர்த்தியும் நற்கதியும் கிடைக்கப் போகிறது. அவனைக் கைவிடாதேயும்" என்று சொல்லி முதுகின் மேல் ஒரு அடியடித்து மறைந்து விட்டார். தாஸர் திடீரென்று எழுந்து யோசிக்கும்

போது திருப்பதிநாதனே நேரில் வந்து நமக்குப் புத்தி சொன்னாரென்று அறிந்து, மறுநாட் காலையில் தியாக ராஜரை யழைத்துட்காரச் செய்து "உனக்கு உபதே சிக்க இதுவே நல்ல தினமென்று சொல்லி, ஸங்கீத வித்தை உபதேசிக்க ஆரம்பித்து விநாயகக் கடவுளின் விஷயமாய்க் கீதம் சொல்லி வரும்போது அக்கடவு ளது அநுக்கிரகத்தினால் வெகு சீக்கிரத்தில் ஸங்கீத வித்தை முழுமையுங் கற்று உணரும்படி செய்து வைத்தார். அப்படியே தியாகராஜரும் பூர்வ வாஸனா பலத்தால் அவையாவையும் தெரிந்துகொண்டார். அப் போது தாஸரு மிவருடைய சூக்ஷ்ம புத்தியையும் குரு பக்தியையும் பார்த்து "நீ பகவதநுக்கிரகத்திற்குப் பாத்திரனாகிவிட்டாய்" எனச் சீடனை வாழ்த்தினார்.

அப்போது தியாகராஜர் பகவான் பேரில் கீர்த்த னங்கள் செய்ய விருப்பத்தால் குருவை அநுமதிகேட்க அப்படியே செய். உனக்கு ஸர்வாபீஷ்டமும் உண் டாகும் என்று ஆசீர்வதித்து அனுப்பினார். உடனே தியாகராஜர் குருவநுக்கிரகம் பெற்றுக்கொண்டு தம திருப்பிடம் வந்து கீர்த்தனைகள் செய்யவேண்டி, முத லில் குருவை வணங்கி గురులేక ఎటువంటి என்னும் கீர்த்தனையைச் செய்து பிறகு தான் யத்தனித்த காரி யங்களுக்கு இடையூறு ஒன்றும் வராமலிருக்கவேண்டு மென விநாயகக் கடவுளை இறைஞ்சி గిరిరాజ என்று ஸ்தோத்தரித்து அவரது அநுக்கிரகம் பெற்றுப் பிறகு ஸாதுக்களை வணங்கி மறுபடி [illegible] என்று ஸ்தோத்தரித்துப் பிறகு ஸ்ரீரகுநாதன் பேரில் [illegible], [illegible] முதலிய அநேக கீர்த்தனங்க ளைச் செய்துவந்தார்.

## அத்தியாயம் - 6.

இப்படி இவர் செய்துகொண்டு வருகையில் ஒரு நாள் கலி யம்சமான ஜப்யேசன் தனக்குச் சிநேகிதர்களான தாஸீ ஜனங்களுக்கு ஸங்கீதம் சொல்லிக்கொடுக்கும்படி இவரை நிர்பந்தித்தான். அதில் இஷ்ட மில்லாதவராய் மறுத்து விட்டார். பிறகு ஜப்யேசன் கபடமாகத் தன்னுடைய குமாரன் பட்டாபி ராமனுக்குச் சொல்லி வைக்கவேண்டுமெனக் கேட்டான். அதற்குத் தியாகராஜர் இவனும் தகப்பனைப்போல் விடனாகி விடுவானோவென யோசித்துத் தட்ட முடியாமல் ஒப்புக்கொண்டு சொல்லி வைத்து வந்தார். அப்படிச் சொல்லி வைத்து வரும் ஸமயம் பார்த்து இந்தத் தாஸீ ஜனங்களையும் ஸமீபத்தி லிருந்து கொண்டிருக்கும்படி ஏற்பாடுகள் செய்தான்.

இப்படிக் கொஞ்சகாலமான பிறகு ஜப்யேசன் தியாகராஜரைப் பார்த்து நம்முடைய குடும்ப காலக்ஷேபம் நிரம்பவும் கஷ்டமாயிருக்கிறது. இந்த தாஸீ ஜனங்கள் சம்பளம் கொடுத்து வருவதாகச் சொல்லுகிறார்கள். ஆகையாலவர்களுக்கும் சொல்லி வைக்கவேண்டுமெனக் கட்டளை யிட்டான். மூத்தவன் சொல்தட்ட முடியாத தியாகராஜரும் தாக்ஷிண்யத்திற் குட்பட்டு அவர்களுக்குஞ் சொல்லிவைத்து வந்தார்.

ஒருநாள் கலியான ஜப்யேசன் இந்தத் தாஸீ ஜனங்களை யழைத்து 'நீங்களவனை எவ்விதத்திலாவது ஸ்வாதீனம் செய்துகொள்ளுங்கள், என்னாலாகவேண்டிய காரியத்தைச் செய்து முடித்துவிட்டேன். எவ்விதத்திலும் நீங்கள் அவனை விடக்கூடாது' எனக்கட்டளையிட்டான். அப்போது கலிக்கு வசப்பட்ட தாஸிகள் வெகு

ஸாகஸிகமான ஸரஸம்செய்ய யத்தனித்தார்கள். அப்போது தியாகராஜருக்கும் யௌவன தசையால் அவர்களிடத்தில் மோகமுண்டானபோது அதைத்தடுத்து நேநுஜாஜூஹி நேஸீவி மனதைக்கண்டித்துரோவஸிவொ என்பதைப்பாடி கலிவலையிலகப்படாமலெப்படி தப்பிப்போம் என்று, தலிவ்யாசிகி என்றுபகவானைப்பிரார்த்தித்து வெவெவ்யாஜி என்பதைப்பாடி அது முதல் சிக்ஷை சொல்லி வைப்பதை நிறுத்திவிட்டார்.

அப்போது ஜப்யேசன் தியாகராஜரைப் பார்த்து 'ஏன் சிக்ஷையை நிறுத்திவிட்டாய்' எனக் கேட்க, தியாகராஜர் "பகவத் விஷயமாய்க் கீர்த்தனைகளைச் செய்து துர்விஷயீகளாகியதாஸீ ஜனங்களுக்குச் சொல்லிக் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை" யென்று கண்டித்துச் சொல்லிவிட்டார். அப்போது ஜப்யேசன் கோபங்கொண்டு 'அடா நம்முடைய காலக்ஷேபத்திற்கு வேண்டிய பொருள் கொடுத்து உதவிசெய்கிறார்கள் அதையும் தள்ளிவிட்டால் காலக்ஷேபம் எப்படி நடக்கும். நீ சொல்லிவைக்கத்தான் வேண்டுமென்று நிர்ப்பந்தித்தான். அப்போது தியாகராஜர் "நான் ஜீவிக்க வேண்டுமானால் உஞ்சவ்ருத்திசெய்துகொள்ளுகிறேன். இந்தத் தொழில் எனக்கு வேண்டாமெனக் கண்டித்துவிட்டார்.

இம்மொழியைக் கேட்ட கலிரூபனான ஜப்யேசன் வருத்தங்கொண்டு, "இவன் இந்த வலையில் அகப்படவில்லையே! ஸ்திரீகளைக் கொண்டல்லவோ புருஷர்களை வசப்படுத்த வேண்டும். ஆகையால் இதற்குத் தக்க உபாயம் என்ன செய்யலாமென யோசித்து உடனே, பக்தரைப்போல் வேஷம்மட்டிலும் தரித்து துன்மார்க்க

மான நடத்தையையுடைய குடித்தன ஸ்திரீகளை வரவழைத்துத் தன் வீட்டிலேயே இருக்கச் செய்து தியாகராஜரை வசப்படுத்துங்கள்' எனக் கட்டளையிட்டான். அப்படியே அந்த ஸ்திரீகளும் இவரிடத்தில் அன்பு பாராட்டி யாவருக்கும் வஸ்திராபரணங்களைக் கொடுத்து வெகு பக்தி சிரத்தையோடு ராமபஜனம் செய்துகொண்டு சுச்ருஷை முதலியவைகளையும்செய்து வந்தார்கள். இப்படிச் சிலநாட் கழிந்ததும் அவர்கள் ஜப்யேசனிடத்தில் வேதாந்தம் படிக்க யத்தனித்தார்கள். நாளடைவில் வெகு கூட்டம் சேர்ந்தது. இவைகளெல்லாம் வாஸ்தவமென்று எண்ணியிருந்த தியாகர்ராஜர் ஒருநாள் இந்த ஸ்திரீகளோடு ஜப்யேசன் ஸரஸஸல்லாபஞ் செய்வதையும் அவர்களை உபசரிப்பதையும் நேரில் பார்த்துவிட்டு மனதில் மிகவருத்தமுற்றுக் கலியுக தர்மத்திற்குப் பயந்து இனி யிந்தப் பூமியிலிருக்கக் கூடாதென நினைத்துப் பகவானை ஸ்தோத்தரித்து ஸாவஸாாஹா என்பதைப் பாடினார்.

பிறகு, ஜப்யேசன் மூத்தவனாதலால் அவனுக்கு நாம் புத்திசொல்லக் கூடாதென நினைத்து அவாந்தர வாக்கியமாக ப க வா னு க் கு த் தெரிவிப்பதுபோல ஸாநுகொழவா, யாலெதலியமெ முதலிய கீர்த்தனைகளைப் பாடி இவனுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கக் கூடாதாவெனப் பகவானைப் பிரார்த்தித்தார். பகவான் அசரீரி வாக்காக 'அடே தியாகராஜா! இந்த ஜப்யேசன் கலிபுருஷன். நீ செய்யும் காரியத்தைக் கெடுப்பதற்காகவே உனக்குத் தமயனாக வந்து ஜனித்திருக்கிறான். அவன் விஷயத்தில் பரிதாபப்பட வேண்டா

மெனச் சொன்ன வசனத்தைக் கேட்டுத் தியாகராஜர் ஆச்சர்யங்கொண்டு கூரிநாசிறுகூ என்பதைப் பாடி பகவானை நினைத்து மிகவருத்தமடைந்து வனவஸிதொநெ என்பதைப் பாடினர். பிறகு இவனால் எவ்வளவு இடையூறு நேரிடினும் நாம் ஈச்வர பக்தியைக் கைவிடுகிறதில்லையென நிச்சயித்து வனஜாநீதந என்று உறுதி செய்துகொண்டு பிறகு ராமநாமமே முக்கியமென்று ராவேதகுவுராநீ இவைகளையும் இன்னுமிது விஷயமாய் அநேக கீர்த்தனைகளையுஞ் செய்து அநேக சிஷ்யர்களைக்கூட்டி அவர்களுக்குச் சொல்லிவைத்தும் வந்தார்.

அப்போது கலியான ஜப்யேசன் இவைகளைப் பார்த்துச் சகிக்க முடியாமல் மிகக்கோபமுற்று, அடா, என்ன ஆச்சரியம் நாம் செய்த யுக்தியெல்லாம் வீணாகவன்றோ போய்விட்டன. இதற்கு வேறு உபாயம் செய்யவேண்டும் என யோசித்து தனக்குச் சினேகிதர்களான கெட்டசெயல்களைத் தமது தொழிலாகக் கொண்டுள்ள கிராதகர் எனத்தக்க சில வைதிக பிராமணர்களை வரவழைத்து அவர்களைக் கொண்டு, பிராமணன் ஸங்கீதம் பாடும்படி எந்தச் சாஸ்திரத்திற் சொல்லியிருக்கிறது? அப்படிப் பாடுவோரை நடவிடகாயகரென்று வேதம் நிஷேதித்திருக்கிறது. அதினும் நீ நல்ல வம்சத்திற் பிறந்தவனாகவுமிருக்கிறாய். குடித்தன வீட்டிலிருந்து எப்போதும் நீ பாடிக்கொண்டிருப்பது சரியல்ல. நீ ஜீவனோபாயத்திற்கு ஒரு மார்க்கம் தேடாமல் இப்படி வீணாகப் பாடிக்கொண்டிருந்தால் நாங்களே அடித்து வெளியில் துரத்திவிடுவோம் என்று சொல்லச் சொன்னான். அந்தப்படியே இந்த ஸோபதிகளும் வந்து தியாகராஜரிடம் சொன்னார்கள்.

அதுகேட்டு தியாகராஜரும் பயந்து நடுங்கி இவர்களுக்குப் பதில் ஒன்றும் சொல்லாமலிருந்து, அப்பொழுது தப்பித்துக்கொண்டு பகவானை நினைத்து தெலியலே ரு ஸவடுவஹார என்ற கீர்த்தனைகளைப்பாடி, 'இந்தப் பாபிகளானவர்கள் உமது மகிமையை யறிந்து கொள்ளவில்லையே' யெனத் துக்கித்து ஸவடுவஹார என்ற கீர்த்தனையைப்பாடி 'இதுவுமுமது வேடிக்கை தான்' என நினைத்து இவர்களுக்குப் புத்திவரும்படி, ஸங்கீதமேமுக்கியமென்றும், அதனுடன்சேர்ந்த ஈச்வர பக்தியே மோக்ஷத்திற்குச்சாதனமென்றும் ஸ்தாபித்து ஸங்கீதஜ்ஞாநமு ஸாஹித்யஜ்ஞாநமு நாதோபாஸந மோக்ஷமு என்று அநேக கீர்த்தனைகளைச் செய்து வெளியிட்டார்.

## அத்தியாயம் - 7.

தியாகராஜர், எது எப்படியிருந்தால் என்ன ஆதியில் நமது உத்தேசப்படி பகவானை ஸ்வாதீனப் படுத்திக்கொண்டால் நம்முடைய காரியங்களெல்லாம் நிறைவேறும். அதற்கென்ன உபாயம் வேண்டுமோ அதை உபதேசிக்கிற குருநாதனெங்கே கிடைப்பாரோ வென மனக்கவலை கொண்டிருக்குஞ் சமயத்தில், இதை யறிந்த நாரதஸ்வாமி ஒரு ஸந்நியாசி வேஷந்தரித்து, தியாகராஜர் வீட்டுத் தெருவாசலில் நின்றுகொண்டு தியாகராஜரைப் பார்த்து, 'அப்பா' ராமபிரும்மம்வசிக்கும் வீடு எதுவென்று கேட்டார்.

தியாகராஜர் உடனே ஸ்வாமிகளை வணங்கிஇந்தக் கிருகந்தான் எனச்சொல்லி யழைத்து ஆஸனத்தில் அமரும்படிப் பிரார்த்தித்து, "ஸ்வாமி! தாங்கள் விசா

ரித்த எங்கள் பெரியவாள் காலமாகிவிட்டனர். அவ ரது இருபுத்திரரில் யான் சிறியவன்; மூத்தவர் வெளி யில் போயிருக்கிருர்' எனச் சொன்னர்.

அதுகேட்ட 'ஸந்நியாசி' அடா, அவர்கள் கால மாகி விட்டதா? எனக்கு அவர் பிராணஸகாவாயிற்றே? நானுமவரும் சேர்ந்து ஒரு ஊரில் சாஸ்திரம், வேதம் முதலியவைகளை அப்பியசித்தோம். அக்காலத்திலே யே அவர் வைராக்கிய சிரோமணியாக இருந்தார். அவ ரும் கிரகஸ்தாச்ரமத்திற்கு வந்து அவருக்கும் ஸந்ததி உண்டாயிற்ரு? வெகு சந்தோஷமெனச்சொல்லி தியாக ராஜரை உட்காரச்செய்து நீ என்ன வித்தையப்பியா சித்திருக்கிருய் எனக் கேட்டார்.

தியாகராஜர் 'ஸ்வாமி! நான் கற்றுணர்ந்த வித் தைகளெல்லாம் வீண் என்றே நினைக்கின்றேன். ஆகை யால் எனக்கொரு வித்தையும் தெரியாது. எனக்கு ஸ்ரீராமபிரான் அநுக்கிரகம் கிடைக்கும்படி தாங்கள் ஆசிர்வதிக்க வேண்டும். யான் என் பிதாவிடம் அத்தி யாயனம், சாஸ்திர பாடம் இவைகளை யப்பியசித்திருக் கிறேன் பிறகு ஸங்கீதத்தால் பகவானைக் கானம் செய்து ஸ்தோத்தரித்து,நேரில் தரிசிக்கவேண்டுமென நினைந்து கானவித்தையையும் கற்றுக்கொண்டேன். பிறகு, பகவத் விஷயமாகக் கீர்த்தனைகளைச் செய்துவரு கின்றேன் எனச் சொன்னர்.

இதைக்கேட்ட ஸந்யாசி வெகு சந்தோஷப் பட்டு, 'ஆனல் கொஞ்சம் சொல்' என்று கேட்டார். அப்போது தியாகராஜர் ராரா நிநெ ஜம்ஷாநந முத லியவைகளைப் பாடும்போது ஸந்யாசி சந்தோஷ மடைந்து 'அப்பா! நான் பூர்வாச்ரமத்தில் ஸங்கீத

வித்தையில் வெகு பிரயாசைப்பட்டு உத்தாதேசத்திற்குப்போய் அதையும் கற்றுணர்ந்தேன். ஸங்கீதம் கற்றதற்குப் பிரயோஜனம் பகவானைத் துதிப்பதே! இக்காலத்தில் வெகு பேர்கள் அப்யசிக்கிறார்கள். அவர்கள் பகவானை நினையாமல் விஷயங்களில் பற்றுடையவராகி காமாதுரமான வரிப்பாட்டுக்களைப் பாடி நரகத்தில் விழுகிறார்கள். அப்படிப் போகாமல் பகவத் விஷயத்தில் உபயோகப்படுத்தினமையால் நீ தன்யனாய் இதைக்கேட்டு நானும் பரிசுத்தனானேன். உனக்குச் சொல்லிவைத்த குருவும் புனிதனாயினர். உன் ஜன்மமே நல்ல ஜன்மம். மேலும் நான் ஸங்கீதம் கற்றுக்கொள்ளும் காலத்தில் அது விஷயமாய் ஒரு புஸ்தகம் கிடைத்தது. அதில் பரமரகஸ்யார்த்தங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன. இதுவரையில் அதை நான் ஒருவருக்கும் வெளியிட்டதில்லை; பிறரிடம் கொடுப்பதான உத்தேசமுமில்லை. இபபோது நீ ஸத்புத்திரனாகவும், பக்திமானாகவும் காணப்படுகிறபடியால் இதோ உன்னிடம் கொடுக்கிறேன். அதில் சொல்லியபடி முதலில் ஸப்தஸ்வர தேவதைகளை உபாஸிப்பாயானால் அவர்கள் பிரத்தியக்ஷமாவர். அந்தப்படி நீ செய் என்று சொல்லிப் புத்தகத்தை தியாகராஜரிடம் கொடுத்துவிட்டு மறைந்தார்.

அப்போது ஆகாயத்தினின்றும் வீணாநாதமானது செவியில் கேட்டது. தியாகராஜர் 'இது என்ன ஆச்சரியம்! நேரிலிருந்த ஸந்யாசியைக் காணோம் வீணாநாதமோ கேட்கிறது. இவர் நாரதஸ்வாமியாக இருக்கவேண்டுமென நிச்சயித்து புஸ்தகத்தை அவிழ்த்துப்பார்க்கும்போது, ஸ்ரீ நாரதீயமென்று எழுதப்பட்டிருந்தது. இவைகளை யோசித்து நாரதஸ்வா

மியைக் குருவாக நினைத்து ஸ்ரீ నారదమునే என்னும் கீர்த்தனையைப் பாடினர். பிறகு அதிற் சொல்லியபடி ஸ்வரதேவதைகளை உபாசித்தார். உடனே அந்தத் தேவதைகள் பிரத்தியக்ஷமானர்கள். அவர்களை శోభిల్లుసప్త என்னும்கீர்த்தனையால் துதித்து அவர்களது அநுக்கிரஹம் பெற்று రాగసుధా స్వరరాగసుధా முதலிய அநேக கீர்த்தனைகளைச்செய்துச் சந்தோஷித்து சிஷ்யர்களுக்குச் சொல்லிவைத்து வந்தார்.

இவரை மகாத்மாவெனப் பலரும் கொண்டாடினர்கள்.

## அத்தியாயம் - 8.

இவைகளெல்லாம் கண்டு சகிக்கமாட்டாத கலியான ஜப்யேசன் தன்னுடைய ஸோபதிகளுடன் சேர்ந்து தியாகராஜரைப் பார்த்து இது விஷயமாய் நாங்கள் முன்னமேயே தெரிவித்திருக்கிறோம். நீ அதைப் பொருட்படுத்தாமல் இவ்விதம் வீட்டிலிருந்து பாடிக்கொண்டிருந்தால் குடும்ப காலக்ஷேபம், நடக்குமா ? சாமி சாமியென்று பாடிக்கொண்டிருந்தால் சாமி வந்து சோறுபோடுமா ! இந்த யுகத்தில் சாமியேது பூதமேது? நீயேன் வீணை காரியத்தைச் செய்து கொண்டு வருகிறாய்! நாங்கள் சோல்வது சற்றேனும் உன் செவியில் நுழையவில்லையா? இனி ஜீவனத்திற்கு ஒரு மார்க்கம் செய்யாதவரையில் கட்டாயமாய் வெளியில் தள்ளிவிடுவோம் என்று சொன்னர்கள். இவ்வார்த்தையைச் செவியுற்ற தியாகராஜர் துஷ்டருக்குப் பயந்து ஸ்வாமியைப் பிரார்த்தித்து ఉదూకావలె டுபடி ఉదూకు முதலியவைகளைப்பாடி, இந்தத் துஷ்டர்

களைப்பார்த்து, ராரோசேஞு நோரெறகிஸ்ரீ என்றுபுத்தி சொல்லும்போது அந்தப் பாதகர் தியாகராஜர் தேகமெல்லாம் புண்பட அடித்து வாக்கினால் திட்டி பலவித துன்பப்படுத்தி வீட்டிலிருந்து வெளியே தள்ளிவிட்டார்கள். வெயில் சகிக்க முடியாமல் பகவானைப்பார்த்து வனஜாக்ஷ நீஷோ என்று பாடிப் பிரார்த்தித்து நடுத்தெருவிலேயே நின்றார். அப்போது அக்கஷ்டத்தைப் பார்த்துச் சகிக்க முடியாத அவருடைய பத்தினியாகிய சாந்தை அம்மாளும் அவருடன் வெளியே வந்துவிட்டாள். ஊரிலுள்ள சாதுக்கள் இவர் படும் துன்பத்தை ஆற்றாதவராய் ஜப்யேசனைப் பார்த்து 'ஏனடா இப்படி அகிருத்யம் செய்கின்றாய்? உனக்கும் அவருக்கும் ஒற்றுமையில்லாவிடின் சமாதானமாக ஒதுக்கிவிடாமல் அடித்து வெளியில்தள்ளி பலஜனங்களும் வேடிக்கைபார்க்கும்படி நீ செய்வது நியாயமல்ல" என்று சொன்னார்கள். ஜப்யேசன் வெகுண்டு "நீங்கள்தான் நியாயம் கண்டீர்; எனக்குப்புத்திசொல்ல வந்தீர்களோ? உங்களை வெகுகாலமாய்த் தெரியுமே" என்று உதாஸினமாகச் சொல்லிவிட்டான். அந்த ஸாதுக்கள் பயந்து தலைகுனிந்து பதிலொன்றும் சொல்லாமல் தியாகராஜரிடம் வந்து "தாங்கள் இவ்விதம் தம்பதிகளாகத் தெருவில் நிற்பது அழகன்று; இப்பவும் அகாலமாகிறபடியால் எங்கள் கிருகத்திற்கு வந்து போஜனம் செய்து கொண்டு மேல்நடக்க வேண்டியதைப் பற்றிப் பிறகு யோசித்துக் கொள்ளலாம்" என்று சொன்னார்கள். அவையனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த தியாகராஜர் 'ஐயா' எனக்கு வீடும் சரிதான்; தெருவும் சரிதான்; எங்கும் நிறைந்திருக்கிற ஸ்ரீரகுநாதன் எங்குப்

போயினன். என்னை இரக்ஷிக்கும் பாரம் அவனுக்குள தன்றோ! என்று உரக்கச் சொல்லி தஜெ௯ுவேடு ஓ ரா௯ என்னும் கீர்த்தனைகளைப் பாடிப் பிறகு ஓரிடத் திற்கும் போகிறதில்லையென்று ஸங்கற்பித்துவிட்டார். அப்போது அங்கிருந்த சாதுக்கள் 'அதிகாரியிடஞ் சென்று நடந்த விஷயங்களைத் தெரியப்படுத்திக்கொள் வோம் வாருங்கள்' என்று தியாகராஜரை அழைக்கும் போது, தியாகராஜர் கூாவிலெவெகூரவ என்னும் கீர்த் தனையைப்பாடி இந்த அதிகாரி யெனக்கில்லை. எனக்கதி காரி ஸ்ரீராமனிருக்கிறான் என்று மறுத்துவிட்டார்.

அந்தச் சாதுக்கள் இவர் படும்பாட்டைச் சகிக்கமுடி யாமல், அவ்வூர் அதிகாரியிடஞ் சென்று நடந்த விருத் தாந்தங்களை விவரித்துச் சொல்லி, இவர் இருக்கும் வைராக்கியத்தைப் பார்த்தால் சீக்கிரத்தில் மரணமடை வார்போ லிருக்கிறது, தாங்கள் இப்பொழுதே ஒரு மார்க்கம் செய்து வைக்காமற்போனல் அந்தப்பழி தங் களுக்கே ஆகும் என்று முறையிட்டபோது, ஸர்வாந் தர்யாமியான எம்பிரான் அதிகாரி மனதிற்குள் ஆவிர் பவித்து உடனே விசாரிக்கும்படிச் செய்தார்.

அந்த அதிகாரி நேரில் வந்து பார்த்ததும் அவ னுக்கே சகிக்க முடியவில்லை. ஜப்யேசனையும் மற்று முள்ளவர்களையும் அழைப்பித்து நியாய விசாரணை செய் ததில் ஜப்யேசன் முதலியவர்களிடத்தில் குற்றமேற் பட்டது கண்டு, அவர்களை தண்டிக்க யத்தனித்தார். அப்போது தியாகராஜர் பார்த்து 'ஸ்வாமி அவர்களை சிக்ஷிக்க வேண்டாம். என் கர்மத்தை யான் அநுபவிக் கிறேன் அவர்களிடத்தில் தோஷமில்லை. தாங்கள்

மன்னித்து என் தமையனாராகிய ஜப்யேசனை விட்டு விடவேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

அப்போது அதிகாரி பார்த்து "இவரோ மகா சாதுவாக இருக்கின்றார் அவர் மனதும் துன்பப் படக்கூடாது; இவர்களைத் தண்டித்தாலும் மறுபடியும் கலகமே செய்வார்கள். இதற்கு எவ்வித உபாயம் செய்யலாம் என்று யோசித்து, இவ்விருவர்களுக்கும்தொடர்வு இல்லாமல் பாகம் செய்து தனியே வைத்துவிட வேண்டுமென்று நிச்சயித்து இவர்களுக்கு இருந்த சொத்துக்களை விசாரித்து இரண்டு பாகமாகச் செய்து தியாகராஜரை அழைப்பித்து உமக்கு எந்தப் பாகம் வேண்டுமென கேட்க, தியாகராஜர் எனக்கு யாதொரு பாகமும் வேண்டியதில்லை. என் பிதாவால் எனக்கு அநுக்கிரகித்துக் கொடுக்கப்பட்ட பூஜாவிக்கிரகங்களை மட்டிலும் கொடுத்தால் போதுமானது' என்று சொல்ல, அதிகாரி பார்த்து இந்த ஸாது பிராமணனை கொஞ்சம் கடிந்து சொல்லாவிடில் காரிய ஹானிவரும் என நினைத்து அந்த விக்கிரகங்களை உமக்குக் கொடுத்தால் அதை வைத்துப் பூஜிப்பதற்குஇடம் வேண்டுமல்லவா? அதற்காக இந்த வீட்டில் பாதியும் ஸ்வாமி நிவேதனத்திற்காக நிலத்தில் பாதியுமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் சாதாரணமாய்க் கையெழுத்துச் செய்கிறீரா, அல்லது ஜப்யேசனுடன் நீரும் ஜயிலுக்குப் போகிறீரா? உம்மாலேயே தான் இவ்வளவு கலகமுண்டாகி இருப்பதாய்த் தெரியவருகிறது. குடும்பத்தில் ஒருவன் சம்பாதித்துப் போடுகிறதும் வீட்டிலிருந்துகொண்டு நீர் ஒரு தொழிலும் செய்யாமல் சாப்பிடுகிறதாகவுமிருந்தால் யார்தான் ஸம்மதிப்பார்கள்? இப்போது

என்ன சொல்லுகிறீர்' என அதிகாரி கடிந்துகேட்க, தியாகராஜர் அதிக பயமடைந்து உடனே கையொப்பம் செய்தார். தன்னைப் புகழ்ந்ததாக நினைத்து ஜப்யேசனும் சந்தோஷித்து உடனே கையெழுத்திட்டான்.

பிறகு அந்த அதிகாரி தான் நினைத்த காரியம் நிறைவேறினதைக் குறித்து வெகுவாய்ச் சந்தோஷித்து உடனே நிலை கதவு முதலிய சாமான்களை வரவழைத்து கட்டிக் குறுக்காய் சுவர் எழுப்பிக்கொடுத்து பிறகு தியாகராஜரை வீட்டிற்குள்ளழைத்து இனி விக்கிரகங்களை இந்த இடத்தில் வைத்துக்கொண்டு சுகமாய் ஆராதியுங்கள் என்று சொல்லி நமஸ்கரித்து தங்கள் விஷயத்தில் நான் யாதேனும் அபசாரப்பட்டிருந்தால் அதை மன்னித்துத் தாங்கள் ஆசீர்வதிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து வெளியில் வந்து, ஜப்யேசன் முதலிய துஷ்டர்களைப் பார்த்து இனி ஸாதுவாகிய தியாகராஜரிடத்தில் ஏதாவது வம்புகள் செய்தால் கட்டாயமாய் தண்டனைக்குள்ளாகுவீர். இது முதல்தடவையாதலால் இப்போது மன்னித்தேன். இனி ஜாக்கிரதையென்று சொல்லி கண்டித்துவிட்டு அதிகாரி சென்றனர்.

இவையெல்லாவற்றையும் மிக்க பொறுமையோடு பார்த்துக் கொண்டிருந்த ஆதித்தனும் தனது வம்சத்தில் பிறந்தவரும் ரகுகுல திலகருமான இத்தியாகராஜர் பசியால் படும்பாட்டை சகியாதவன்போல் மேற்கிலுள்ள அஸ்தகிரியில் மறைந்தனன்.

## அத்தியாயம் - 9

அன்று சாப்பாட்டுக்கு அகாலமாய்விட்டபடியாலும், அதற்கு வேண்டிய சாமான்களை எல்லாம் புதிதாகச் சேகரிக்க வேண்டியிருந்தமையாலும் அன்று உபவாஸமாகிவிட்டார். இரவு 10 மணிக்குமேல் தியாகராஜருக்குப் பசி அதிகரித்துத் தாங்க முடியாமல் வருத்தங்கொண்டு நிந்தாஸ்துதியாக ஈவிமிவஸவ வென்பதைப் பாடி ஸ்துதித்தார்.

அப்போது ஸ்ரீரகுநாதன் அவர் படும் துயரத்தைக் கண்டு சகியாமல் ஸீதாதேவியைப் பார்த்து, 'ஏ ஸீதா! நமது பக்தன் பசியோடு தபித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தாயா? இதற்கு ஒரு உபாயம் சொல்லுகிறேன்; அந்தப்படி செய்யவேண்டுமெனச் சொல்லி, ஸீதையை விருத்தையாகவும், ஸஹோதரர்களைக் குழந்தைகளாகவும் தனது உண்மையான பக்தனாகிய ஆஞ்சநேயரை ஒரு யௌவன வித்யார்த்தியாகவும் ஆக்கித் தான் ஒரு கிழப் பிராமணனாக வந்து இரவு 10 மணிக்குத் தியாகராஜர் வீட்டுக் கதவைத் தட்டினார்.

58888

உடனே, தியாகராஜர் கதவைத்திறந்து நீங்கள் யாரய்யாவென்று கேட்க அப்போது அந்த விருத்தர், நாங்களிருப்பது உத்தர தேசம்; ஸேதுயாத்திரை செய்து வருகிறோம். கண்ணிற்கு இருட்ட, இந்த க்ஷேத்திரத்திற்கு வந்தோம். இன்று பிரதோஷ தினமாகையால் ஸ்வாமி பூஜை, நிவேதனம் செய்துகொள்வதற்கு இவ்வூரில் ஒருவரும் இடங்கொடுக்கவில்லை. நாங்களோ விருத்தர்கள், இவைகளோ குழந்தைகள்; பசியோ பொறுக்கவில்லை. எங்களுடைய கஷ்டத்தைப் பார்த்

து. தாங்கள் கொஞ்சம் இடங்கொடுத்தால் சௌகர்யமாயிருக்கும். அப்படி இல்லாவிட்டால் தாங்கள் தயவு செய்து ராமபிரும்மத்தின் குமாரர் தியாகராஜர் இருக்கும் இடத்தையாவது சற்று தயவுசெய்து காண்பியுங்கள். ஏனெனில், நாங்கள் ஸேது யாத்திரை செய்து திரும்பி வரும்போது ஒரு பிராமணர் என்னைக் கண்டு, காவேரி தீரத்தில் பஞ்சநத க்ஷேத்திரத்தில் தியாகப் பிரும்மமெனப் பேருடைய ஒரு பக்த சிகாமணி இருக்கிறார்; அவரைக் கண்டு தரிசித்துப் போங்கள் எனக் கூறினார். ஆதலால் சற்று தயவு செய்யுங்கள் எனக் கேட்டார்.

தியாகராஜர், ஓாஸாமெ நீரணீ ஏ ராமா! இது ஏதோ பரிசோதனையாயிருக்கிறது என நினைத்து வந்த விருத்தரை நமஸ்கரித்து 'ஸ்வாமி! நானே அந்தத் தியாகராஜன்; இந்த மகா பாபியினுடைய பெயரையும் சொல்லுவார்களா! நான் செய்திருந்த பாபத்தால் இன்று தெய்வபூஜை முதலியவைகளில்லாமல் உபவாஸமாகவே இருக்கும்படி நேர்ந்துவிட்டது. இப்படிப் பட்ட மகா பாபியான என்னைத் தாங்கள் மெச்சவேண்டாம். தங்களுடைய இந்தக் கிரகத்திற்கு நான் அதிகாரியில்லையே; கிருபைசெய்து என்னை ரக்ஷிக்கவேண்டுமென்றார்.

இதைக்கேட்ட விருத்தர் வெகு சந்தோஷப்பட்டு, 'அப்பா! இது எனது கிரகமா! நீங்கள்தானா தியாகராஜர்! உம்மைப் பார்த்தபோதே எங்களுக்குப் பசிகளை தீர்ந்துபோயின. இப்படிக்கொத்த மகா ஸாதுவான உமக்கு இவ்வளவு கஷ்டம் எப்படி நேர்ந்தது? நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நாங்கள் யாத்திரை

செய்பவராதலால் எங்களிடம் ஸகல ஸாமான்களு மிருக்கின்றன. நமது சிஷ்யன் ஒரு நொடியில் பாகம் செய்து விடுவான். நீங்களும் தம்பதிகளாக என் னுடனே போஜனம் செய்யவேண்டியது. உமது பூஜை களை நானே செய்து விடுகிறேன் எனச் சொல்லி பாகம் முதலானதுகள் நடக்கும்படி ஆஞ்சநேயருக்கு ஆக்ஞா பித்தார். இதைக்கேட்ட தியாகராஜர் இதுவும் தெய்வ ஸங்கற்பம் தான் என்று இருந்தார்.

உடனே, ஆஞ்சநேயர் ஒரு நிமிஷத்தில் பாகம் செய்து வெந்நீரால் எல்லாருக்கும் ஸ்நானம் செய்வித் துப் பூஜைக்கு வேண்டிய சுச்ருஷைகளைச் செய்து வைத்தார். பிறகு,விருத்தர் தாம்பூலந்தரித்துக்கொண்டு தியாகராஜருடைய யோகக்ஷேமங்களை விசாரிக்கும் போது, தியாகராஜர் ஜப்யேசனல் ஆதிமுதல் ஏற்பட்ட விருத்தாந்தங்களையும் அன்று நடந்த விசேஷங்களையும் ஒன்று விடாமல் சொல்லிவிட்டார். இதைக் கேட்ட விருத்தரூபியான பகவான் உமக்கிழைத்த தீங்கானது எனக்குச் செய்ததுபோலவே தோன்றுகிறது. ஆயி னும்,நீங்கள் ராமபக்திசெய்துகொண்டு ஸாதுக்களுடன் சேர்ந்து, சாந்த விருத்தியோடு இருப்பீர்களேயாயின், உங்களுக்குச் சீக்கிரத்தில் ஸ்ரீராமபிரான் பிரத்தியக்ஷ மாவார். உங்களை அடித்து வைததெல்லாம் என்னைச் செய்ததாக நினைத்துக் கொள்ளுங்கள் எனச் சொல்லித் தாம்பூலத்தைக் கையில் கொடுத்து பரிவாரங்களோடு மறைந்துவிட்டார். அப்போது விடிய ஐந்துநாழிகை யிருக்கும். இதைப் பார்த்திருந்த தியாகராஜர் சற்றுப் பிரமித்து நின்று, பிறகு தேர்ச்சியடைந்து தமக்குள் 'அடா! ஸ்ரீராமமூர்த்தி யல்லவா இப்படி நமது விஷ யத்தில் சிரமமெடுத்துக்கொண்டு பரிவாரங்களோடு,

பிராமண ரூபத்துடன் வந்து நமக்குத் தைரியமும் சொல்லி மறைந்து விட்டவர்! இவர் தான் அதிகாரி ரூபமாய் வந்து நம்மைப் பயப்படும்படிச் செய்து சங்கடத்திலிருந்து நிவர்த்தி செய்தவர். அப்படிப்பட்ட இவரது பாதங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளாமல் மோசம் போனேனேயென்று ஸவநூ॰ தநராவூ என்றுபாடி, இது தேவரகஸ்யமானதால் இதை ஒருவருக்கும் வெளியிடக்கூடாதென்று பத்தினிக்கும் ஆக்ஞாபித்து, இந்த ஸேவை இன்னுமொரு தடவை கிடைக்குமோ வென்று கூ॰ மூ॰ நா என்று ஆஞ்சநேயரைப் பிரார்த்தித்தார்.

## அத்தியாயம் - 10.

பகவான் நம்மிடத்தில் கிருபைசெய்து நமக்கிருந்த நிர்பந்தத்தை நீக்கி, நம்மைத் தனியே யிருக்கும்படி செய்து, நமக்குத் தைரியமும் சொல்லி இருப்பதால் இது முதல் நாம் பகவானைத் தினப்படி அலங்கரித்து, பாகவதோத்தமர்களுடன் ஸந்நிதியி லிருந்துகொண்டு நித்யோற்சவங்களை நடத்திக்கொண்டு வருவதென்று நிச்சயித்தார். அருணோதயமானவுடன் இவர் வெகு சந்தோஷத்துடன் வெளியில் வந்து பார்த்தார்.

அப்போது இவருக்குச் சத்துருவாகிய ஜப்யேசன் தன்னுடைய ஸோபதிகளோ டிருந்துகொண்டு தியாகராஜரைப் பார்த்து, 'நேற்றுக் குடித்தனத்தை வேறு பண்ணிச் சென்ற இந்த அநாதைக்குக் காலையில் இவ்வளவு சீக்கிரமாக எங்கே சாப்பாடு கிடைத்தது. அக்ஷதை, சந்தனம், தாம்பூலம் முதலியவைகளைத் தரித்துக்கொண்டு வெகு ஸந்துஷ்டனாக வெளியே

வந்து பார்த்துப் போகிறான்' என வெகு உதாஸீனமாகச் சொன்னான். அதைக்கேட்ட தியாகராஜர் அதிக வருத்தங்கொண்டு நாஉ¯லெவெ, ஊநாய¯யந¯ என்று பாடி உன்னுடைய மனிதனான என்னைச் சொல்லியதெல்லாம் உன்னைச் சொன்னதாகவே பாவிப்பேன் என்று வாரிஜநப என்பதையும் சொல்லிவிட்டு அன்றைய தினமுதல் தினந்தோறும் பாகவதோத்தமர்களைச் சேர்த்துக்கொண்டு பகவானுக்கு திருமஞ்சனம் முதலானவைகளும் செய்து அலங்கரித்து ஸந்நிதியிலிருந்துக்கொண்டு 'கொஇ¯வரோ கொஇ¯லெவெய¯ணாவெ முதலிய அநேக கீர்த்தனங்களைப்பாடி ஸ்வாமிக்குநிவேதனம் ஷோடசோபசாரம் முதலியவைகளைச் செய்து, பிறகு டோலோற்சவம், சயனம், எழுப்புதல், முதலிய கீர்த்தனைகளைப்பாடி, பிறகு தான் போஜனஞ்செய்து படுப்பார்.

இவ்விதம் தினந்தோறும் செய்துகொண்டு வருகையில் ஒருநாள் காலையில் திரையைக் களைந்து பார்க்கும்போது ஸந்நிதியில் இருந்த பால் பழங்களைக் காணவில்லை. வட்டிலில் இருந்த தாம்பூலந் தம்பலமாக இருந்தது கண்டு, 'இந்த ரகஸ்யத்தை ஒருவருக்கும் வெளிவிடாதே யென்று மனைவிக்கு ஆக்ஞாபித்து அந்தத் தம்பலத்தைக் காலையில் தான்' ஸந்நிதி திறந்தவுடன் புசித்துவந்தார். (இது காலஞ் சென்ற, ஸ்வாமிகளது ஆப்த சிஷ்யரான அய்யா பாகவதரவர்களால் கேள்வி)

இவ்விதமாக, அநேக சிஷ்யர்கள், ஸாதுக்கள் இவர்களோடு உத்ஸவம் செய்து வருகையில், இவைகளைச் சகிக்க முடியாத கலிரூபியான ஜப்யேசன் தன்னுடைய

ஷோபாதிகளைப் பார்த்து 'இவனுக்கு ஸகா ஒருவருமில்லையென்று நினைத்தோமே! இப்போது எவ்வளவுபேர் கூடுகிறார்கள்! இதன் மூலமாய் ஏதோ வரும்படி கிடைக்கும்போலிருக்கிறது. இப்போது நாம் எல்லாரும் கூடி தினந்தோறும் பஜனை வைத்துக் கொண்டால் நம்மிடத்திலும் பிரிய முண்டாகி வெகு ஜனங்கள் சேருவார்கள். அதனால் நமக்கும் நல்லவரும்படி கிடைக்கும். நீங்கள் என்ன சொல்லுகிறீர் எனக் கேட்க, அவர்கள் 'பலே! இது நல்ல யுக்திதான்; அப்படியே செய்வோமென்று சொன்னார்கள். உடனே ஜப்யேசன் தன் வீட்டிலும் பல படங்களை வரவழைத்து அலங்கரித்து தனக்கு வேண்டினவர்களான தாஸீ முதலிய ஸ்திரீ ஜனங்களையும் அவர்களைச் சேர்ந்த நடவிடர்களையும் வரவழைத்துக் கூட்டங் கூடி தவலை, நகரா, சோமகலம், ஜாலரா முதலியவைகளைப் பலக்க அடித்து அடிக்கடி கூச்சலிட்டுப் பலவாறாக தியாகராஜர் செய்துவரும் பஜனைக்கு விக்னங்களைச் செய்து வந்தான்.

இவைகளைத் தாங்கமாட்டாத தியாகராஜர், இவன் செய்யும் துன்பங்களை அப்பகவானுக்குத் தெரிவிக்க வனவெொ நனெரா என்று ஒரு வாதுகூட இல்லையாவென் துக்கித்து, இந்தப்பாமரர் உண்மையான பக்தியை அறியவில்லையே எனப் பரிதபித்து உநவஸா நிஜஸாகி என்பதைப் பாடி ஸமாதானம் செய்துகொண்டு இது விஷயமாய் எவ்வளவு இடையூறு நேரிடினும் நாம் விடுகிறதில்லையென்று தீர்மானித்துக் கொண்டார்.

இப்படி இவர் உண்மையாக பக்திசெய்து வருங் காலத்தில் ஒருநாள் இவருக்கு ராகத்வேஷாதிகள் கோபதாபங்களிருக்கின்றனவா அல்லது சாந்தவிருத்தி

யிருக்கிறதா, பார்ப்போம் என நினைத்து, ஒரு ஸித்த புருடனைப்போல், ஆஞ்சநேயர் தியாகராஜர் முன்பாக வந்து, சோதிடம் கூறுவதுபோல் ' ஸ்வாமி நீங்கள் இரண்டுபேர் சகோதரர்கள் உமக்கு மூத்தவரால் அநேக கஷ்டங்கள் உண்டாகிக்கொண்டு வருகின்றன. நீர் ஸ்ரீராமபதம் அடைய வேண்டுமென ஈச்வரனை உபாஸித்து வருகிறீர். ஆனால் உமக்கு இன்னும் ஒரு ஜன்மமிருக்கிறது. ஆயினும் துன்பங்களெல்லாம் இந்த ஜன்மத்தில் நிவர்த்தியாகிவிடும். இப்போது நவக்ரக பலம் கொஞ்சம் போதாது. அது விஷயமாய்க் கொஞ்சம் சாந்திசெய்துகொண்டு, நானொரு யந்திரம் தருகிறேன். அதை ஒருவாரம் பூஜையில் வைத்து நான் உமக்கு உபதேசிக்கும் மந்திரத்தைத் தினம் ஆயிரத்தெட்டு உரு ஜபித்து, உம்முடைய சத்ரு வீட்டு வாசவில் புதைத்து விடுவீரேயானால் அவன் மூலதோஹானியாய்ப் போய்விடுவான் எனச் சொன்னார்.

இதைக்கேட்ட தியாகராஜர் இந்தப் பாபகிருத்யம் நமக்கு எதற்கு என்று எண்ணி [illegible] என்பதைப் பாடி அந்த ஸித்த புருஷருக்குச் சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டார். ஆஞ்சநேயரும் இவர் சாந்தத்தையும் உறுதியையும் பார்த்து ஸந்தோஷித்துப் போய்விட்டார்.

பிறகு தியாகராஜர் ஸமாதானத்தை அடைந்து வழக்கம்போல் உத்ஸவம் செய்து வந்தார். தியாகராஜர் ஒவ்வொருதினங்களிலும் பகவானுடைய ஸௌந்தரியங்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து కనకనరుచిరా இது முதலான அநேக கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு குத்துவிளக்கைச் சுற்றிச் சுற்றிவந்து ஆடு

வார்; பக்தி மேலிட்டால் சற்றுப் பாடுவார். இப்படி தன்னை அறியாமலே ஆநந்த பரவசராக பக்திசெய்து கொண்டு வரும்போது. இவரது பக்தியாகிய கல்பக விருக்ஷமானது ஆனந்தமாகிய க்ஷீரஸாகரத்தை ஆச்ரயித்து நாளுக்குநாள் விருத்தியடைந்து வந்தது. ஜப்யேசனுடைய கபட பக்தியாகிய முள்ளுக் கீரையோ துக்க ஸாகரத்தினல் வளர்க்கப்பட்டு க்ரோதாக்கினியால் தகிக்கப்பட்டு நாளுக்கு நாள் கருகிக்கொண்டே வந்தது.

## அத்தியாயம் - 11.

அப்போது கலியான ஜப்யேசன் அதிககோபங் கொண்டு தன்னுடைய ஸோபாதிகளை விட்டு, தியாகராஜரைக் கண்டவிடமெல்லாம் தூஷித்து வரும்படி செய்தான். அந்தத் தூஷணங்களையெல்லாம் கேட்ட தியாகராஜர் அதிகவருத்தமடைந்து தொலிஜந்மமுந ஸு ராஸுதிடு முதலிய கீர்த்தனைகளைப்பாடி சாந்தராகிப் பிறகு ஆதியில் நமக்குப் பகவான் சொன்னபடி இது வரையில் நேரில் தரிசனம் கொடுக்கவில்லை. அவரை அப்படித் தரிசிப்பதற்கு எவ்விதம் உபாஸிக்க வேண்டுமோ, அதை நமக்குத் தெரியச் சொல்லுகிற குருநாதர் எங்கிருக்கிருரோ என மனக்கவலை கொண்டார்.

அது தெரிந்த நாரதஸ்வாமி ஒரு யோகீச்வரர் வேடங்கொண்டு தியாகராஜர் முன் வந்துநின்றார். தியாகராஜர் அவரை வணங்கி ஆஸனத்தில் அமரும்படி பிரார்த்தித்து கைகட்டி நிற்க அப்போது யோகீச்வரர் 'ஏ பாகவதோத்தம! நீர் மனதில் கவலைகொண்டிருப்பதை யான் அறிவேன். என்னையும் வேஷதாரியென்று நினைத்தாலும் சரி நம்பினாலும் சரி,

நீ ஆதியில் பகவானை நேரில் தரிசிக்க வேண்டுமென நினைத்தீர். இப்போது உம்முடைய பக்திக்கு இடையூறு செய்துவருகிற துஷ்டர்களைச் சம்கரிக்க வேண்டுமென்று நினைக்கிறீர். சத்ருவைச் சம்காரம் செய்துவிட்டால் பகவான் தரிசனம் கொடுக்கமாட்டார். உமக்கு எதில் பிரியமென்று கேட்டார்.

தியாகராஜர் அவரை வணங்கி 'இவர் உண்மையைச் சொல்லுகிறபடியால் இந்த மகானிடத்திலேயே உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டுமென நிச்சயித்து 'ஸ்வாமி! நான் பகவானை நேரில் தரிசிக்க வேண்டிய உபாயத்தைத் தேவரீர் கிருபைசெய்து எனக்கு உபதேசிக்க வேண்டும்' என்று வெகு பணிவுடன் கேட்டார். யோகீச்வரரும் தன்னுடைய யதார்த்த ரூபத்தைக் காண்பித்தபோது தியாகராஜர் அவர் பாதத்தில் விழுந்து பூர்வஜன்ம ஞானத்தோடு என்பதைப்பாடி ஸ்ரீரகுநாதனை இந்த ஜன்மத்தில் தரிசிக்க வேண்டிய உபாயத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்ட தியாகராஜரைப் பார்த்து நாரத ஸ்வாமி "அப்பா உனக்கு இன்னும் கொஞ்சம் பிராரத்த கர்மமிருக்கிறது. ஆதலால் பொறுத்திருந்து நான் இப்போது உபதேசிக்கிற மந்திரத்தை அதிக ரகஸ்யமாக வைத்துக்கொண்டு அன்னியசிந்தையின்றி எழுகோடி ஆவர்த்தி செய்து முடிப்பாயேயானால் அன்றைய தினம் உனக்கு ஸ்ரீராமபிரான் பிரத்தியக்ஷமாவர். அதன் பிறகு உன் பிரதிபந்தம் தீர்ந்து உண்மைஞானம் வரும். அதனால் ஜன்ம நிவர்த்தியும் இந்த லோகத்தில் வெகு கீர்த்தியும் கிடைக்கும்" என்று சொல்லி மந்திரத்தை உபதேசித்து அநுக்கிரகித்துச் சென்றார். அது முதல் தியாகராஜர் அந்த மந்திரத்தை

ஜபித்து முடிக்கும் ஸமயத்தை வெகு ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

இத்தருவாயில் ஒருநாள் ஜப்யேசனுக்கு அவன் பெண்சாதி வீட்டிலிருந்து அதிசீக்கிரமாக வரும்படி ஒரு கடிதம் வந்தது. உடனே ஜப்யேசன் வீட்டி லிருந்த எல்லாரையும் அழைத்துக்கொண்டு ஊர்போய் விட்டான்.

தியாகராஜர் ‘இதுதான் நல்ல ஸமயமென்று [illegible] என்பதைப் பாடி உடனே அந்த க்ஷேத்திரத்துச் சிவாலயத்துக்குள்ளிருக்கும் தக்ஷிண கைலாயத்துட் சென்று ஓர் இடத்திலிருந்து ஆகாரம் நித்திரையின்றி அந்த மந்திரத்தை ஒரு மண்டலத்தில் சாதித்து முடித்தார்.

உடனே ஸ்ரீராமபிரான் ர்ச்யமுக பர்வதத்தில் பரிவாரங்களோடு சூழ்ந்து கொண்டிருக்கிற சேவை யைத் தரிசனம் கொடுத்தார். அந்த ஸேவையைத் தரிசித்த மாத்திரத்தில் பூர்வ ஞானம் வந்துவிட்டது. பகவானை ஸ்தோத்தரிக்க எத்தனித்தபோது நா எழ வில்லை. ஆனந்தமேலிட்டால் கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கிக்கொண்டு மவுனமாக இருக்கிற தியாகராஜரைப் பார்த்து பகவான் சமாதானம் செய்து மறைந்து விட்டார். தியாகராஜர் வெகு சந்தோஷ மடைந்து [illegible] என்பதைப் பாடி நாம் ஸ்வாமியை நேரில் தரிசித்தும் குறைகளைச் சொல்லிக் கொள்ள முடியாதபடி நமது தீவினையே நமது நாவை யெழவொட்டாமல் தடுத்ததோவென [illegible]ப்பாடி பிறகு ஸ்வாமி மறைந்துவிட்டதை நினைத்து [illegible] என்னும் கீர்த்தனையைப் பாடும்போது

பகவான் அச்வமேத மண்டபத்தில் பரதாதிகள் சததிரம் சாமரம் போடவும், தேவஸ்திரீகள் நர்த்தனம் செய்யவும் ஸமஸ்த தேவர்களோடு சூழ்ந்து கொண்டிருக்கும் ஸேவையைத்தியாகராஜருக்குத்தரிசனம் கொடுத்தார். அபபோது தியாகராஜர் பகவானை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து கை கட்டிக்கொண்டு ஸ்வாமியைப் பார்த்துக் கொண்டிருந்தார். பகவான் இவரைக் கடைக் கண்ணால் கடாக்ஷித்துப் பரதனைப் பார்த்து சாமரத்தை நிறுத்தென்றும், தேவதாஸிகளுக்கு நர்த்தனத்தை நிறுத்தும்படியாகவும் கட்டளையிட்டார்.

திடீரென்று இவ்வாறு ஆக்ஞாபித்ததைக் கேட்ட அச்சபையில் உள்ளோர் யாவரும் பிரமித்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கும்போது, பகவான், 'ஏ தியாகராஜ! இப்படி ஸமீபத்தில் வா. உன்னாலல்லவா இவ்வளவு பாக்கியமும் கிடைத்தது; என்னுடைய ஸமீபத்தில் இருவென்று சொல்லி உட்காரச் செய்து பிறகு நர்த்தனம்செய்ய உத்தரவு கொடுத்தார். அதைப் பார்த்து ஸ்வாமி தியாகராஜரை நோக்கி 'இந்த பாவம்' லயம், சரியாவென்று அடிக்கடி கேட்டு ஸந்தோஷித்துத் தியாகராஜரை சிலாகிக்கும்போது, ஸ்வாமியினது அழகிய திருமுகமண்டலத்தினின்று வரும் இனிய வசனங்களைக் கேட்டு, தெவஸ்திரீகள் ---- வெகு சந்தோஷமடைந்து கொண்டாடினார்கள். உடனே ஸ்வாமி அந்தர்த்தியானமாகி விட்டார். அதை நினைத்து தியாகராஜர் ---- என்பதைப் பாடினார்.

பிறகு நாரதஸ்வாமி சொல்லியபடி பகவான் நமக்கு நேரில் இரண்டு தடவை தரிசனம் கொடுத்திருக்கிறபடியால் எவ்விதத்திலும் நம்மை இரக்ஷிப்பாரென்று நம்பிக்கையோடு தியாகராஜர் சந்தோஷித்துடன் எப்போதும்போல நித்தியோற்சவங்களை நடத்தி வந்தார்.

## அத்தியாயம் - 12.

இது இவ்வாருக, முன் ஊர்போயிருந்த ஜப்யேசன் முதலான எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். இவர்களைக் கண்டுகொள்ள பழைய சிநேகிதர்கள் வந்தார்கள். ஒருவருக்கொருவர் குசலப்ரசனம் செய்துகொண்ட பிறகு ஜப்யேசன் நண்பர்களைப் பார்த்து 'அடுத்த வீட்டு வேஷதாரியான திருடன் இப்போது எந்த ஸ்திதியிலிருக்கிருன்' எனக் கேட்டான். அவர்கள் 'ஐயா! அதைப்பற்றி எங்களால் சொல்லி முடியாது. நீங்கள் ஊர்போன பிறகு தக்ஷிண கைலாயத்துக்குள் ளிருந்து சுமார் இரண்டுமாத காலமாக ஆகார நித்திரையின்றி ஏதோ ஒரு மந்திரத்தைக் கற்றுக்கொண்டு அதைச் சாதித்து முடித்தான். இப்போது அவனைக் கண்டால் ஜனங்களெல்லோரும் பயப்படுகிருர்கள். பில்லி சூந்யம் வைத்து விடுவானேவென்று எங்களுக்கும் பயமாகவே யிருக்கிறது இப்போது அவனுக்குப் பெரிய மனுஷ்யர்கள் எல்லாரும் கைவசமாகப் போனுர்கள். உத்ஸவமோ முன் நடந்ததைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாகவே நடந்துவருகிறது என்று சொன்னுர்கள்.

அதைக்கேட்ட ஜப்யேசன் வெகுண்டு இதற்கு என்ன உபாயம் செய்யலாம் என யோசித்து 'இவன்

சிவதரிசனைக்காகச் சாயங்காலம் வழக்கம்போல்தம்பதி யோடு போய்விடுவான்; அந்த ஸமயத்தில் அவன் பூஜித்து வருகிற விக்கிரகங்களை எல்லாம் எடுத்து ஒருவருக்கும் தெரியாத இடத்தில் கொண்டுபோய்ப் புதைத்து விடுகிறது. அப்போதுதான் இவன் ஆட்டமெல்லாம் ஒடுங்கிப்போய் விடுமென யோசித்து ஸமயம் பார்த்து வந்தான். ஒரு நாள் அப்படியே நேர்ந்தது. அப்போது தன்னுடைய குமாரனான பட்டாபிராமனைக் கொண்டு சுவரேறிக் குதித்து விக்கிரகங்களைக் கொண்டுவரச் சொல்லி, அப்படி அவன் கொண்டுவந்த விக்கிரகங்களை யெல்லாம் வாங்கித் தன்வீட்டுக் கிணற்றடியில் புதைத்து விட்டான்.

சிவதரிசனை செய்துகொண்டு திரும்பி வந்த தியாகராஜர், ஸ்வாமிக்குத் தீபாராதனை செய்யப் பார்க்கும்போது, விக்கிரகங்களைக் காணவில்லை. கீழே விழுந்து 'ஆ இது என்ன மோசமோ தெரியவில்லை. நமக்குச் சத்துருக்களான தாயாதிகள் எடுத்துப்போயினரோ,? அல்லது நம்மிடத்துப் பிரியமில்லாமல் தான் பகவான் சென்றுவிட்டாரோ,? அல்லது நம்மை இரக்ஷிக்க எங்கேயாகிலும் ஒளிந்து கொண்டிருக்கிருரோ ? எனப் பல வாருகச் சிந்தித்துப் புலம்பி நாயெடவஞ்சன நேராய ஐதா ஊர நம்மெதி வனரூடாகி முதலிய கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு இரவு முழுவதும் நித்திரையின்றி புலம்பிக் கொண்டிருக்கும்போது பக்தபராதீனரான ஆஞ்சநேயர், ஜப்யேசன் செய்த கொடுமையைச் சகிக்க முடியாது இரவு இரண்டுமணி ஸமயத்தில் ஜப்யேசனுடைய மார்பில் ஒரு பாதத்தை வைத்து அழுத்த நித்திரை செய்துகொண்டிருந்த ஜப்யேசன் 'ஓவென்று

அலறி, ஜலமல விசர்ச்சனை செய்துகொண்டு எழுந்தான். வீட்டிலிருந்த மற்றவர்களும் இச்சத்தத்தைக் கேட்டு 'ஆ' வென அலறி எழுந்தார்கள்.

இவர்களும் கண்ணைத் திறந்து பார்க்கும்போது ஆகாயத்திற்கும் பூமிக்கும் கரிய அதிகோர ரூபத்துடன் நிற்கும் ரூபத்தைக் கண்டு எல்லாரும் சேர்ந்து பெரிய கூச்சலிட்டார்கள். அப்போது அவ்வூரிலிருந்த ஜனங்கள் அக்கூக்குரலைக் கேட்டு 'ஆ இது என்ன பெரிய கூச்சலா யிருக்கிறது. நெருப்புப் பற்றிக்கொண்டதோ அல்லது யாராவது கொள்ளை யடிக்கிறார்களோ வென்றுசொல்லிக்கொண்டேகூட்டமாகநெருங்கிவந்து கேட்கும்போது ஜப்யேசனுடைய பத்தினியானவள் அவளுக்கு வேண்டிய ஸோபதிகளி லொருத்தியிடத்தில் "ஐயா! நீங்கள் முன்னமேயே சொன்னீர்களே அதைக் கேளாமல் அடுத்த வீட்டு விக்கிரகங்களை அறியாப் பாலகனாகிய பட்டாபியை விட்டு எடுத்து வரச் சொல்லிக் கிணற்றடியில் புதைத்துவிட்டாரென்று இரகசியமாகச் சொல்லிவிட்டாள். அவனும் அவனை அடக்கிவிட்டு வந்த ஜனங்களுக்கு ஏதோ ஒரு கனாக் கண்டதாகச் சாக்குப்போக்குச் சொல்லி ஸமாதானப்படுத்தி அவர்களை அனுப்பிவிட்டு ஜப்யேசனை நோக்கி "ஐயோ! அது துஷ்டதேவதை ஆயிற்றே! அது உங்களுக்கு வேண்டாம். அவன் கற்றிருக்கும் மந்திரமும் பொல்லாது. ஆகையால் அவைகளை வைத்துக் கொள்ளாமல் அவனிடத்திலேயே கொடுத்துவிடுங்கள் என்று சொன்னான்.

அப்போது ஜப்யேசன் 'காலையிலாகட்டும்' என அவர்களுக்கு இரகஸ்யமாகச் சொல்லி யனுப்பிவிட்டு

மனைவியைப் பார்த்து 'ஏ துஷ்டை இப்படிக்கொத்த விஷயங்களை எவ்வளவு இஷ்டர்களுக்கானாலும் வெளிச் சொல்லலாமா? எனக் கண்டித்துவிட்டு 'இந்த விக்கிரகங்களை நாம் ஒப்புக்கொண்டு திருப்பிக் கொடுத்துவிட்டால் நம்முடைய பேரில் பெரிய குற்றங்கள் ஏற்படும். என நிச்சயித்து விடியுமுன்னரே ஒருவருக்கும் தெரியாமல் விக்கிரகங்களை எடுத்துக் காவிரிநதிப் பிரவாகத்தில் எறிந்து விட்டான்.

காலையில் வந்து விக்கிரகங்களைத் திருப்பிக்கொடுக்கும்படி கேட்ட சிநேகிதர்களைப் பார்த்து அடா உங்களுக்குக்கூட பயித்தியமா! விக்கிரகங்களை யார் கண்டார்? நாங்களாவது எடுக்கவாவது. அந்தச்செப்புக்கட்டையில் என்ன இருக்கிறது? தூக்கக் கலக்கத்திற் பெண் பிள்ளையானவள் ஏதோ உளறினால் அது ஒரு காரியத்திற்காகுமா! வென்று மறுத்து ஸமாதானம் சொல்லிவிட்டான். அவர்களும் சரியென்று சொல்லி நம்பிப்போயினர்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த தியாராஜர் ஸகிக்க முடியாமல் ஊஜெநெருமி என்னும் கீர்த்தனையைப்பாடி 'இவன்தான் என்று அறிந்து கொண்டு ஊரிவாரிமெஃ என்பதைப்பாடிப் புலம்பியும் திரஸீநாநா வெகுஜமாரவெஊாஜீநி இக் கீர்த்தனைகளைப்பாடி துக்கித்துக்கொண்டிருக்கிற தியாகராஜரைச் சில ஸாதுக்கள் வந்து விசாரித்து சங்கதி தெரிந்து கொண்டு ஸமாதானமாக 'ஸ்ரீராமமூர்த்திக்கும் உமக்கும் கொடுத்து வைத்திருந்த ரணரணிபாவம் இவ்வளவுதான்; இனி அதைப்பற்றிச்சிந்திப்பதில்பயனில்லை. தங்களுக்கு யாங்கள் வேறு விக்கிரகம் அழைப்பித்

தருகிறோம். அவைகளை வைத்துக்கொண்டு பூஜித்து உத்ஸவாதிகளை எப்போதும்போலவே செய்துவாருங்களெனச் சொன்னார்கள்.

தியாகராஜரோ இதற்குச் சம்மதியற்றவராய் நிகூ தநகூ இக்கீர்த்தனையைப்பாடி, புலம்பி இன்றையதின முதல் மூன்று தினங்களுள் விக்கிரகங்கள் கிடைக்காவிடில் பிராணத்தியாகம் செய்துவிடுகிறதென நிச்சயித்து விட்டார். இடையில் அநேக கூடிய வனடுவ கீர்த்தனைகளைப் பாடி கடைசி மூன்றுவது தினத்திலும் பார்த்து இனி விக்கிரகங்கள்கிடைக்காவென்றுதெரிந்தும் விடிய ஜாமத்திற்கு எழுந்து காவிரி வெள்ளத்தில் விழுந்து விடுவதாக நிச்சயித்துக்கொண்டு ஆற்றை நோக்கிப் போகும் தருணத்தில் இவர் எதிரில் பரம பக்தரான ஆஞ்சநேயர் பிரத்தியக்ஷமாகி ‘நீ இப்போது பிராணத்தியாகம் செய்ய வேண்டாம். நமது ராமன் வந்து விடுவார். அந்தக் கலியான ஜப்யேசன் அவர்களை ஸ்பரிசித்து விட்டபடியால் அந்தப்பாய நிவிர்த்தியின்பொருட்டுக் காவிரியில் நீராடிக்கொண் டிருக்கிறார்: நீ உத்தராயணம் பிறந்தவுடன் இன்ன இடத்தில் மணலைப் பிரித்துப் பார்த்தால் அவ்விடத்திலேயே எல்லா விக்கிரகங்களும் அகப்படும். அதுவரையில் பொறுத்திருந்து யானுபதேசிக்கும் மந்திரத்தை மனதில் நாட்டி ஜபித்து வந்தால் ஸ்ரீராமபிரான் பிரத்தியக்ஷமாகித் தரிசனங் கொடுப்பார். அவரைக் கண்டு மானஸீகமாகப் பூஜித்து வாவென்று வீட்டிற்குத் திருப்பி அனுப்பிவிட்டு மாருதி சென்றனர்.

தியாகராஜர். மனவருத்தத்துடன் உமக்கும் பாபம் இருக்குமாவென்று நீவெஹா நி பாடி சாந்தராகி

[illegible] என்பதினால் ஆஞ்சநேயரை ஸ்துதித்து யோகஸமாதியிலிருந்து ஸ்ரீராமபிரானை ஹ்ருதய கமலத்தில் தரிசித்து ஆனந்தமடைந்து [illegible] என்னும் கீர்த்தனையால் மானஸீகமாகப் பூஜித்து இந்த ஆனந்தத்தை வெளியிட்டு [illegible] முதலியவைகளைப் பாடிச் சந்தோஷித்திருந்தார்.

## அத்தியாயம் - 13.

இப்படி இருந்துவரும் சமயத்தில் ஒரு நாள் துஷ்டனான ஜப்யேசன் தனது ஸோபதிகளைப் பார்த்து 'ஏ நண்பர்களே! நாம் செய்த யுக்தியால் அடுத்த வீட்டு பாட்டுக் கூத்துக்களெல்லாம் தொலைந்துபோய் கதவை அடைத்துக்கொள்ளும்படியான ஸ்திதி வந்தது பார்த்தீர்களா என்று கர்வத்தோடு சொன்னான். அப்போது சிநேகிதர்களில் ஒருவன் "ஐயா இப்போது என்ன வந்து விட்டது? பெண்டாளோ தேவதா என்னும் வசனப்படி இரகஸ்யமாக இடைவிடாமல் ஏகாந்தபக்தி நடந்துவருகிறது. அதற்கு ஆள் கூட்டம் தேவையில்லை. பத்துமாதத்தில் பலன்கிடைக்குமென உதாஸீனமாக இகழ்ந்து சொன்னான். இதைக்கேட்ட தியாகராஜர் மனவருத்தங்கொண்டு பகவானைப் பார்த்து [illegible] என்னும் கீர்த்தனையைப் பாடி சாந்தராகி பகவானை நேரில் தரிசிக்க வேண்டுமெனக் கருதி [illegible], [illegible] முதலான கீர்த்தனங்களைப் பாடும்போது ஸர்வாந்தர்யாமியான பகவான் கோதண்ட பாணியாய் ஸீதாலக்ஷ்மண ஸமேதராய் தியாகராஜருக்கு நேரில் வந்து தரிசனம் கொடுத்தார். தியாகராஜர்பகவானைத்தரிசித்து [illegible] [illegible], இவற்றைப் பாடிக் கேட்கும்

போது ஸ்வாமி மவுனமாகஇருப்பதுகண்டு ఓడనుజరిపె ముచ్చటకనరారె இக்கீர்த்தனைகளைப்பாடினதும்ஸ்வாமி சந்தோஷித்து தியாகராஜரைப்பார்த்துஎன்னைநீ நேரில் தரிசிக்கவேண்டுமென்றே விக்ரகரூபியான யான் காவிரியில் மூழ்கிக்கொண் டிருந்தேன். அஞ்சனுபுத்திரன் உனக்குக் குறிப்பிட்ட இடத்தில் மணலைப் பறித்தால் விக்கிரகங்களெல்லாம் அகப்பட்டுவிடும். கவலையற்று பூஜித்து வரலாம் எனச் சொல்லிய பகவானைப்பார்த்து தியாகராஜர் నన్నువిడచి నన్నుబ్రోవరావ இவைகளைப்பாடி దేవదేవ తత్వమెరుగనీవిధ ఏనీ த்வோபதேசம்செய்து கொண்டு 'இக்கலிஹிம்சைக்கு எப்போது நிவர்த்தியெனக்கேட்கும்போது 'உனக்குக் கொஞ்சம் பிராரர்த்த மிருப்பதால் பொறுத்திருவெனச் சொல்லும்போது தியாகராஜர் உம்மை நேரில் தரிசித்தும் பாபமிருக்குமாவென்று కారుణావేల, నీవాదనే, ఎందాని முதலியவைகளைப் பாடினபோது பகபான் ஒன்றும் சொல்ல முடியாமல் மறைந்துவிட்டார். அப்போது தியாகராஜர் பார்த்து நாம் என்ன அபசாரம் செய்தோமோ இப்படி எதிர்த்துக்கேட்டதினுல் தான் மறைந்துகொண்டாரோ என நினைத்து ఉపరాయమా பாடி பகவானுடைய சௌந்தரியங்களை நினைத்து நினைத்து ఏవరురాని నాశ్రీ முதலிய அநேக கீர்த்தனைகளைப்பாடி மறுபடியும் பகவான் நேரில் வரவேண்டுமென்று సుఖీరానిదాక ఖీరానిదారెదా என்று பலவாருகப் பாடி வேண்டிக்கொண்டும் பகவான் வரவில்லை. அப்போது ஜகன் மாதாவாகிய ஸீதாதேவியை సీతమ్మమాయమ్మనావు பிரார்த்திக்தும்போது ஜானகி தேவியானவள் பகவா

னுக்கு ஸ்பர்சு செய்தாள். அப்போது பகவான் மன மிரங்கி ஸீதா லக்ஷ்மண ஆஞ்சநேயர் ஸகிதராய் எதிர் வந்து நின்றார். அப்போது தியாகராஜர் రారా మాయింటి దాక எனக் கேட்டு ஸ்ரீ ஜானகியைப் புகழ்ந்த మా జానకి శ్రీ జనకతనయే, సరియెవ్వరే முதலிய கீர்த்தனைகளைப் பாடும்போது பகவான் லக்ஷ்மண ஸ்வாமியினது முகத்தைப் பார்த்தார் லக்ஷ்மணரும் ஆஞ்சநேயர் முகத்தைப் பார்த்தார்; இப்படி ஒருவருக்கொருவர் பார்க்கும்போது தியாகராஜர்பார்த்து సుఖియెవ్వరో రామనామ இவைகளைப்பாடி ஸ்தோத்தரிக்கும் போது ஸ்வாமி மௌனமாக இருந்தார். அப்போது தியாகராஜர் [illegible] இக்கீர்த்தனைகளைப் பாடி சத்துருஸம்ஹாரம் செய்யவேண்டுமென ஸூசிப்பித்தார். அப்போது பகவான் இவன் வாக்கினால் சொல்லிக்கொள்ளுகிற வரையில் சங்கரிக்கிற தில்லையென நிச்சயித்தார். தியாகராஜர் அப்போது యుక్తముగాదు யென்பதைப் பாடித்துதித்தும் பகவான் மவுனமாக இருப்பதைப் பார்த்து பாதத்தில் வீழ்ந்து దయసేయ என்ற கீர்த்தனையைப் பாடும்போது பகவான் நமதெண்ணம் நிறைவேறினதென்று சந்தோஷித்துச்சத்துருவை ஸம்காரம் செய்ய ஆஞ்சநேயருக்கு உத்தரவு கொடுத்தார்.

உடனே அனுமார் கலிரூபமான ஜப்யேசனுடைய பிராணவாயுவின் வழியாய் உட்சென்று வயிரை உப்பச்செய்து தனது பிதாவாகிய பிராணவாயுவை அழைத்துக்கொண்டு வெளியில் வந்துவிட்டார். இது தெரிந்த தியாகராஜர் வெகு சந்தோஷமடைந்து ஆஞ்சநேயரை పాహిరామ கீர்த்தனையால் துதித்து பகவானைப்

பிரதக்ஷிணஞ் செய்து ఇక్షణమే பாடிச்சந்தோஷித்து వనజాక్షా முதலியவற்றைப் பாடித் துதிக்கும் போது பகவான் தியாகராஜரைப் பார்த்து இதுவரை யில் என் பக்தர்களான பிரக்லாதன் சுக்ரீவன் விபீஷ ணன் முதலானவர்கள் சத்துருக்களுக்குப் பயப்படா மல் அவர்களைச் சம்கரிக்க வேண்டுமென்று என்னிடம் சொல்லிக் கொண்டார்கள். நீ அற்ப கலிக்குப் பயந்து அவனைச் சம்கரிக்க வேண்டுமென்று கேட்காத குற்றத் தினுல் உனக்கிவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்தன. இனி ஒன்றுக்கும் பயப்படாமல் நிச்சிந்தையோடு இருந்து கீர்த்தனைகளைச் செய்து வரலாமென அநுக்கிரகித்து காவிரியிலிருக்கிற என் ரூபமான விக்கிரகங்களை எடு த்து வந்து முன்போல உத்ஸவாதிகளைச் செய்துவா வெனக் கட்டளையிட்டு மறைந்தார்.

பிறகு தியாகராஜர் முன் குறிப்பிட்ட இடத்தில் மணலைப் பறித்துப் பார்க்கும்போது அந்த விக்கிரகங்க ளெல்லாம் அகப்பட்டன. அவைகளை வீட்டிற்கு எடுத் துவரும்போது சந்தோஷமடைந்து రారామాయింటి,రా రవీకారుణి, முதலிய அநேக கீர்த்தனைகளைப்பாடி அழைத்துவந்து திருமஞ்சனம் முதலானவைகள் செய்து அலங்கரித்துப்பெரிய மகோத்ஸவமாகக்கொண் டாடினுர்கள்.

பிறகு இவர் ராமப்பஜனைசெய்துகொண்டு அநேக கீர்த்தனைகளைச்செய்து சிஷ்யர்களுக்குச் சொல்லி நித் யோற்சவத்திலும் ஸ்ரீபஞ்ச நதீச்வர ஸ்வாமி ஸப்தஸ் தான மகோற்சவ முதலிய நைமித்திர உற்சவங்களி லும் இக்கீர்த்தனைகளைப் பஜனைசெய்து வரும் வைப வத்தை ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனுலும் அள விட முடியாது.

# இரண்டாம் பாகம்.

## அத்தியாயம் - 1.

ஒருநாள் தஞ்சைநகரத்தரசன் தம்மிடத்திற்கு வரும்படி ஸ்வாமிகளை அழைக்க அவ்விடத்திற்குச் செல்ல மனமில்லாதவராய் நியிவாய என்னும் கீர்த்தனையைப் பாடி நரஸ்துதியிலும் பரிசுபெறுவதிலும் விருப்பமில்லாதவராய் உபேக்ஷையாயிருக்க அவ்வரசன் கோபங்கொண்டு அவரை நிர்பந்தித்தாவது தன்னகரத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று எண்ண, அவனுக்குப்பொறுக்கமுடியாத வயிற்றுநோய் உண்டாயிற்று. அவன் பெரியவரை அவமதித்ததனால் உண்டாயிற்று என்று அறிந்து அவரைச் சரண் அடைய அவரும் அந்நோய் நீங்கும்படி பகவானைப் பிரார்த்தித்தார். அரசனுக்கு நோய் குணப்பட்டது.

ஒருநாள் தர்மபத்தினியானவள் வீட்டுக்குள்ளிருந்து ஸ்ரீ தர்மஸம்வர்த்தனியோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், தியாகராஜர் திடீரென்று உள்ளே பிரவேசிக்கவும் தேவியார் மறைந்தருளினர். அவர் தமது மனைவியை நோக்கி 'நீ யாருடன் பேசிக் கொண்டிருந்தாய் எனக் கேட்க அந்த அம்மாள் ஒன்றும் பேசாமல் நிற்க அப்போது ஊபிநிசெதஊ வஸ கொ முதலிய கீர்த்தனைகளைப்பாடித் தானறிந்துகொண்ட சங்கதியைப் பிரகாசிக்கச் செய்தார்.

பிறகு தனது பத்தினியானவள் பரகதியடையவே, அந்த உத்தமியின் நற்குணத்தை நினைத்து அவள் பிரிவை ஆற்றாதவராகி கீர்த்தனையைப்பாடிசமாதான மடைந்தார்.

## அத்தியாயம் - 2.

பிறகு ஸ்தலயாத்திரை செய்யக் கருதி, திருப்பதி ஸ்தலமடைந்து ஸ்ரீ அலர்மேல்மங்கை நாதனுன ஸ்ரீநி வாஸப் பெருமானைத்தரிசிக்க ஆலயத்துட்செல்ல திரை ஸமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்போது ஸ்வாமிகள் பகவானைத் தரிசிக்க இயலாமையால் தமது பாவமே திரையாக வந்து மறைக்கிறதென்றெண்ணி தெர தீய ரா என்னும் கீர்த்தனையைப் பாடக் கட்டிக்யிருந்த திரை கீழே விழுந்தது. அப்போது வெங்கடேசனை வணங்கி வெంకటే என்னும் கீர்த்தனையால் துதித்து மீண்டு வருகையில் 'கோவூர் என்னும் சிவஸ்தலத்தில் வஸித்திருந்த சுந்தரமுதலி யாரென்னும் பக்தர் இவர் வரவையுணர்ந்து எதிர்கொண் டழைத்து, அவ்வூர் ஸ்ரீ சுந்தரேச்வரர் பேரில் ஸ்ரீஸுந்தரேசுனி .நஜிவஜி நநஜ ஸம்போ மஹா முதலிய கீர்த்தனைகளைப் பாடி ஸ்வாமியை ஸ்தோத்த ரித்துப் பிறகு அவ்வூரை விட்டுப் புறப்பட்டு வருகை யில் சுந்தரேச முதலியார் தியாகராஜரது வைராக்கியத் தையுணர்ந்து 'இவர் நம்மிடத்து எதையும் ஏற்றுக் கொள்ளார்' என்று நிச்சயித்து இரகஸ்யமாய் ஆயிரம் ரூபாய் அடங்கிய பையை அவருடைய பல்லக்கில் வைத்து இதை சிஷ்யர்களுக்கு மாத்திரம் தெரிவித்து அனுப்பினர்.

விடியற்காலத்தில் சிஷ்யர்கள் பல்லக்கைத் தூக் கிக்கொண்டு இருபக்கங்களிலும் காடுகள் அடர்ந்த மார்க்கமாய்ச் செல்லும்போது திருடர் சிலர் பல்லக்கை வளைத்துக்கொண்டு வில்லிற் சிறுகற்களை வைத்துப்

பல்லக்கை அடித்தனர். பல்லக்கைச் சுமந்து வரும் சிஷ்யர்கள் மிகவும் பயந்து 'ஸ்வாமி! திருடர்வந்திருக்கிறார்கள் பயமாயிருக்கிறது என்ன செய்வோமென்றனர். அதற்கு குரு 'நம்மிடமென்ன விருக்கிறது? நமக்கென்ன பய' மென்றார். உடனே சீடர் "ஸ்வாமி! கோவூர் சுந்தரேச முதலியார் ஆயிரம் ரூபாய் நிறைந்த ஒரு பையை இப்பல்லிக்கில் வைத்திருக்கிறார் என்று சொல்லினர். தக்ஷணமே அவர் பல்லக்கை நிறுத்திக்கொண்டு பகவானை நினைத்து ஊநூ¬ஙெவெடீஜகி என்னும் கீர்த்தனையைப்பாட அப்போது ராமலக்ஷ்மணர், பயங்கரமான சேவகர்களைப் போல் வேடம்பூண்டு பல்லக்கினிருபுறங்களிலும் நின்று அம்பு எய்தார்கள். அந்த அம்புகள் திருடர்மீது பட்டுக் காயப்படுத்தினவே வொழிய ஒருவருக்கும் பிராணஹானி உண்டாக்கவில்லை. ஏனெனில் அவர்கள் தியாகராஜரது கருணைக்குப் பாத்திரராகப் போகிறார்களானதால் பகவானுக்கு அவர்களைக் கொல்ல மனமில்லை. திருடர்களோ சிறிது தூரம் சென்று பல்லக்கினிரு புறங்களிலும் நின்று காவல்புரியும் சேவகர்களின் சுந்தரத்தையும் பராக்கிரமத்தையும் பார்த்துக்கொண் டிருந்தனர். அப்போது சூரியனும் தன் குலதிலகர்களான ஸ்ரீராமலக்ஷ்மணருக்குப் பல்லக்கைக் காக்கும் சிரமத்தை நீக்குவான்பால் கீழ்த்திசையில் உதயமானான். உடனே ஸ்ரீராமலக்ஷ்மணர் மறைந்து போயினர்.

இவையனைத்தும் தியாகராஜருக்காவது அல்லது அவர் சிஷ்யர்களுக்காவது தெரியாது. பின்பு திருடர்கள் தியாகராஜரைச் சமீபித்து 'ஸ்வாமி! நாங்கள் திருடர்கள் தங்களிடம் திருடவந்தோம். பல்லக்கின் இரு

புறங்களிலும் நின்று எங்கள்மீது அம்பு எய்துவந்த இருவரும் எங்கேமறைந்து போயினர்? அவர்கள் எங்களை அம்புகளால் காயப்படுத்தியிருப்பினும் அவர்கள் மீது எங்களுக்குக் கோபமுதிக்கவில்லை. அவ்வளவு சௌந்தரியமுள்ளவர்களை எங்கனுப்பினீர்களென்று கேட்டனர்.

இதைக்கேட்ட தியாகராஜர் அப்படிவந்து காத்து மறைந்து சென்றவர் ஸ்ரீராம லக்ஷ்மணர்களாகவே யிருக்கவேண்டுமென நிச்சயித்து, ஆனந்தக்கண்ணீர் பெருக்கி, திருடர்களைப்பார்த்து 'ஏ திருடர்களே! நீங்கள் கண்ட சேவகனை எங்களுக்குத் தயவுசெய்து காட்டுங்கள்' இந்த ஆயிரரூபாயையும் உங்களுக்கே கொடுத்து விடுகிறேன்' என்று பல்லக்கிலிருந்த ரூபாய்மூட்டையைக் கீழேதள்ளினர். அவ்வளவில் திருடர்கள் ஆச்சரியமுற்று 'ஸ்வாமி! சேவகர்கள் நின்றது தங்களுக்குத் தெரியாதா? ஆயிரம் ரூபாய் எங்களுக்கு கொடுத்து அவர்களைக் காட்டச் சொல்லுகிறீர்களா' என விண்ணப்பம் செய்ய தியாகராஜர் 'ஏ திருடர்களே! எங்கள் குலதெய்வமான ஸ்ரீராம லக்ஷ்மணர்களைக் கண்ணுற்க்கண்ட உங்கள் பாக்கியமே பாக்கியமென்று அவர்களைக் தரிசித்தமையாலும் பரமபாகவதோத்தமரது கடாக்ஷத்தினாலும் தமது திருட்டுத் தொழிலை விட்டு அன்றுமுதல் ஸ்ரீராமபக்தர்களாய்த் தியாகராஜரது சரணத்தையடைந்து அவரது பல்லக்கைச் சுமந்துகொண்டு வந்தார்கள்.

பிறகு இவர் திருவொற்றியூர், சிதம்பரம், ஸ்ரீரங்கம், நாகை, சீகாழி முதலான திவ்விய க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஆங்காங்குக்கீர்த்தனையைப்பாடிப் பகவானைத் துதித்துத் தமது வாஸஸ்தலத்தையடைந்தார்.

பல்லக்கைச் சுமந்து வந்த திருடரும் நல்ல ஞானமுற்று ஸ்ரீராமபஜனம் செய்துகொண்டு ஆனந்தங்கொண்டிருந்தனர்.

---

## அத்தியாயம் - 3.

தியாகராஜரும் முன்பகவான் கட்டளையிட்டனுப்பியபடி ராமாயணம்போல் ராமசரித்திரங்களை 2400 கீர்த்தனங்களாகச்செய்து முடித்து ஸ்ரீராம பதத்தையடைய விரும்பி இருக்கும் சமயத்தில் ஸ்ரீநாரத ஸ்வாமி தியாகராஜருக்குத் தரிசனங்கொடுத்து அவரைப் பார்த்து 2400 கீர்த்தனைகளும் செய்து முடித்து விட்டீரோ வென்று கேட்டார். தியாகராஜர் சந்தேகமடைந்து சோதித்துப் பார்க்க மூன்று கீர்த்தனைகள் பாக்கிப்பட்டது கண்டு வருத்தமுற்று அதை நாரதருக்குத் தெரிவித்துக் கொண்டார்.

யாழ் முனிவர் சற்றுப்பொறுத்திரு ; நான் உன்னிடம் வந்தபிறகு அவைகளைமுடிக்கலாம் என்றுசொல்லிவிட்டு யமனுலகு சென்று ஆங்கு தர்மராஜனால் உபசரிக்கப்பெற்று ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

அப்போது ஒரு தூதன் வந்து வணங்கி 'ஸ்வாமி இன்றைக்கு எனக்கு ஏதாவது வேலையுண்டா? எனக் கேட்டான். அந்தத் தூதனைப் பார்த்து தர்மராஜன் இன்றைக்கும் ஆயுதங்களை துலக்கிவைக்கும் வேலை தான் என்று பதிலுரைத்தான். இவ்வார்த்தையைக் கேட்ட தூதன் வெகு அச்ரத்தையோடு போவதைப் பார்த்து தருமன் சிந்தை கெட்டிருந்தான். இதைப்பார்த்த நாரதர் தருமனைநோக்கி 'என்னசிந்திக்கிறாய்' எனக் கேட்க அவன் 'ஐயா பூலோகத்தில் என் நண்பனுனக்கலியை அவமதிக்கத் தியாகராஜன் என்று ஒருவன் அவதரித்து தாரகமந்திரத்தைச்சங்கீதத்துடன் சேர்

த்துப்பாடுகிறான். அதைக்கேட்டு ஸகல பிராணிகளும் நன்மார்க்கத்தில் செல்லுகிறார்கள். எனக்கோ வேலை கிடையாதென்பதைத்தாங்களே தெரிந்துகொள்ளலாம். எக்காலத்திலாவது தாங்கள் வந்த சமயத்தில் என் உலகு இவ்வளவு நிச்சப்தமாயிருந்தது உண்டா? நான் வேலையைக்கூட ராஜிநாமா கொடுத்துவிடலாமாவென்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்' என்றுசொன்னான்.

இவற்றைக்கேட்ட நாரதஸ்வாமி 'இந்த யுகத்திற் கூட இப்படியும் நடக்குமா? நல்லது நான் போய் வருகிறேன்' என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு பூலோகம் வந்து கலியைக்கண்டார். கலி அவரை வணங்கி 'ஸ்வாமி! தங்கள் வரவு நல்வரவாகுக. தாங்களிவ்விடம் வந்து வெகு நாளாயிற்றே! எவ்விடமிருந்து வருகிறீர் எனக்கேட்டான்." யான் எமலோகத்திலிருந்து வருகிறேன் என்று பதிலுரைத்தார்.

ஆங்கு என்ன விசேஷமென்று கேட்டகலியை நோக்கி 'கலியே! உன்னால் தர்மராஜன் வேலையை ராஜிநாமாக் கொடுக்கப்போகிறானாம்; இதுதான் விசேஷம்' என்றார். 'அது யாது காரணமெனக் கேட்ட கலியைநோக்கி நாரதர் 'இத்தியாகராஜர் செய்துவரும் காரியங்களுக்கு நீ கெடுதிசெய்ததினால் பகவான் அவரிடத்தில் பிரியங்கொண்டு காரியத்தை நிறைவேற்றிவிட்டாராம். அதனால் எல்லாரும் தியாகராஜர் கீர்த்தனையைப் பாடுவதாலும் கேட்பதாலும் வைகுண்ட முதலான புண்யலோகங்கள் போய்ச்சேர்வதினால் தனக்கு வேலையில்லாமல் போயிற்றென வெகு குறையோடு உன்பேரில் வருத்தங்கொண்டு அவன் சொன்னான். அது எனக்கும் அப்படித்தானிருந்தது. ஆனால் நீயும் புத்திமானாயிற்றே! அப்போதைக்கப்போது தக்க யுக்தி தேடிக்கொள்வாய் என நினைத்து நானும் சற்று உபேக்ஷையாயிருந்து விட்டேன்; காரியம் மோசம் போய்விட்டது. கொஞ்சகாலந்தான் அந்த ஆட்டமும்;

அதைக்கெடுப்பதற்கு, நீ மித்திரனுகையால் உனக்கு ஒரு உபாயம் சொல்லுகிறேன். ஸங்கீதஸௌகமல்லவோ அக்கீர்த்தனைகளைப் பாடும்படி இழுக்கிறது. அதற்கும்மேம்பட்ட ஸௌகத்தைக் கொடுக்கும் இந்துஸ்தான், பார்ஸி, ஜாவளி முதலியவைகளை விருத்தி செய்து வந்தால் சங்கீத சுகத்தினல் இதையே அப்பியசிப்பார்கள். இக்கீர்த்தனைகள் இருந்த இடம் தெரியாமற் போய்விடும்; தருமனுக்கும் உன்பேரில் பிரியமுண்டாகும் என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு தியாகராஜரிடம் வந்தார். அப்போது ஸ்ரீநாரதமுனிவரைத் துதித்து இன்றைக்குத்தான் அனுதியான அஞ்ஞான ஸாகரத்தினின்றும் கரையேறினேம் என்று நினைத்து ஸ்வாமிகளை வணங்கி, ஆசனத்தமரும்படி செய்து 'என்னிடமிருந்து எங்குச் சென்றீர்; அதன் விவரம் யாதெனக்கேட்க, நாரதர் தான் யமலோகம் சென்று திரும்பிவந்ததையும் கலியைக்கண்டு ஆங்கு நடந்த விசேஷங்களையும் சொல்லிவிட்டுப்பாக்கிமூன்று கீர்த்தனங்களையும் செய்துபூர்த்திசெய்வாய் என்று கட்டளையிட்டு வைகுண்டலோகஞ் சென்று பகவானுக்குத் தியாகராஜர் விஷயத்தைத் தெரிவித்தார்.

---

## அத்தியாயம் - 4.

இம்மகான் நாரதர் சொன்ன வார்த்தைகளால் நம்முடைய காரியங்களெல்லாம் நிறைவேற்றிற்றென சந்தோஷமடைந்து விஷி த்ரு ஜோலெ என்னும் கீர்த்தனையைப்பாடி பரமாத்மாவிடஞ் சேரவேண்டி ஒயஜஂபஉஷிஸபே இவைகளைப்பாடும்போது பகவான்நேரில்

வந்து உனக்கு இன்னுமொரு ஜன்மமிருப்பதால் நீ ஸந்நியாசமெடுத்துக்கொள் அது முதல் ஏழாவது தினத்தில் உனக்கு என் பதவியளிக்கிறேன் என்று சொல்லி மறைந்தார்.

உடனே இவர் மிக சந்தோஷமடைந்து, வேத விதிப்படி நடப்பவராகிய அந்தண சிரேஷ்டரையும் பாகவதோத்தமரையும் வரவழைத்து தன் கிருகத்தில் நாதபிரும்மானந்தர் என்னும் பெயருடன் ஸந்நியாசம் பெற்று பகவான் நியமித்த ஏழாவது தினமாகிய கலி 4948 பராபவ வருஷம் புஷ்யபகுள பஞ்சமி திதியில் பிரும்மஸ்வரூபமாய்ப் பிரகாசித்து கபாலத்திலிருந்து ஒரு அற்புதஜ்யோதிஸ் உண்டாகி ஆகாயமார்க்கமாய்ப் போகவே ஸகல ஜனங்களும் தரிசித்து ஆச்சரியமடைந்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. கானத்தில் கந்தர்வர்களையும் தோற்கச்செய்ய அவர் சிஷ்யர்கள் ஸ்ரீராமபஜனம் செய்தனர். பிறகு மிகுதியான உத்ஸவத்தைக் கொண்டாடினார்கள். உடனே தியாகராஜஸ்வாமிகளுக்கு ஸந்நியாச விதிப்படி காவிரி தீரத்தில் ஸமாதிசெய்து மஹாபிஷேகமும் செய்வித்தார்கள். அந்த ஸமாதி இப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இவர் ஸமாதியைத் தரிசிப்பவருக்கும் இவர் சரித்திரத்தைப்படித்துக் கேட்போருக்கும் ஸர்வபீஷ்டமும் உண்டாகும்.

ஸ்ரீஸமத் குரு தியாகராஜ ஸ்வாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

பரமகுருவே நம:

NR21WL59